RATNA PARĪKSHA

2116

BEING TREATISES ON GEMS
FROM SMṚTISĀRŌDDHĀRA
&
BY ĪS'WARADĪKṢITA

2116

THE TANJORE MAHARAJAH SERFOJI'S SARASWATI MAHAL LIBRARY

Edited with Translation in Tamil
by

Sri K. S. Subrahmanya Sastrigal,
Pandit,
Saraswati Mahāl Library, Tanjore.

2116

Published by
SRI S. GOPALAN B. A., B. L.,
Honorary Secretary,
for the Administrative Committee, T. M. S. S. M. Library, Tanjore.

A. C. 1958 · S'aka 1880

Price: **Re. 1**

RATNA PARĪKSHA

2116

BEING TREATISES ON GEMS

FROM SMṚTISĀRŌDDHĀRA

&

BY ĪS'WARADĪKṢITA

2116

Edited with Translation in Tamil

by

Sri K. S. Subrahmanya Sastrigal,

Pandit,

Saraswati Mahāl Library, Tanjore.

THE TANJORE MAHARAJAH SERFOJI'S SARASWATHI MAHAL LIBRARY + TANJORE +

Published by

Sri S. GOPALAN, B. A., B. L.,

Honorary Secretary,

for the Administrative Committee, T. M. S. S. M. Library, Tanjore.

A. C. 1958 S'aka 1880

Price: **Re. 1**

Printed at the
Sri Vani Vilas Press, Srirangam.

श्रीः 2116

रत्नपरीक्षा

(स्मृतिसारोद्धारान्तर्गता, ईश्वरदीक्षितीया च)
द्राविडानुवादेन सहिता ।

श्री क्षे. शं. सुब्रह्मण्यशास्त्रिणा
सरस्वतीमहाल् ग्रन्थालयपण्डितेन सानुवादं परिष्कृता ।

तञ्जावूर् सरस्वतीमहाल् ग्रन्थालयाक्रीतकार्यदर्शिभिः
श्रीयुत. एस् गोपालन्, बि. ए., बि. एल्.,
महाशयैः प्रकाशिता ॥

क्रैस्तवाब्दः 1958. शकाब्दः 1880.

मूल्यम् रू. 1

श्रीगणेशाय नमः

முகவுரை.

நீரோட்டமும், பிரகாசமும் உள்ள கற்களுக்கு ரத்னங்கள் என்று பெயர். இத்தகைய கற்களின் குணங்களையும் தோஷங்களையும் கண்டறிவது கடினமான விஷயந்தான். ஆயினும் அவைகளை மக்கள் ஸுலபமாகத் தெரிந்து கொள்ளும் பொருட்டு, மஹர்ஷிகள், புராணங்களிலும், ஸ்மிருதிகளிலும், சிற்பநூல்களிலும், வைத்திய நூல்களிலும், ரத்தின பரீக்ஷையை மிகத்தெளிவாகக் கூறியுள்ளார்கள்.

பல மேதாவிகள், அந்நூல்களிலிருந்து ரத்தினங்களின் குணங்களையும் தோஷங்களையும் மட்டிலும் தனித்து எடுத்து, ரத்தினபரீக்ஷ, ரத்தினசாஸ்திரம் என்ற பெயருடன் பல நூல்களைச் செய்திருக்கிறார்கள். ஈசுவரதீக்ஷிதர் என்பவர் தனது நூலில், ரத்ன சாஸ்திரம் 1. ஆகஸ்தியம் 2. உத்பலபரிமளம் 3. வர்கடம் 4. விசுவகர்மீயம் 5. ரத்தினஸாரஸங்கிரஹம் 6. ஆங்கீரஸம் 7. ஸ்மிருதிஸாரோத்தாரம் 8. என்று ரத்தினபரீக்ஷகளைக் கூறும் நூல்களின் பெயரை வெளியிட்டிருக்கிறார். இன்னும் எத்தனைபேர்கள் செய்திருக்கிறார்கள் என்பதை நிச்சயமாகக் கூறுவதற்கில்லை.

எனினும் தஞ்சை ஸ்ரீ ஸரஸ்வதி மஹால் நூல் நிலயத்தில் ஹாலாஸ்ய மாஹாத்மியத்தில் அபிஷேக பாண்டிய சரித்திரத்தில் கூறப்பட்டிருக்கும் ரத்தின பரீக்ஷ 1. ஸ்மிருதிஸாரோத்தாரத்தில் கூறப்பட்டிருக்கும் ரத்தின பரீக்ஷ 2. ஈசுவரதீக்ஷிதீயத்திலுள்ள ரத்தின பரீக்ஷ 3. ரத்ன பரீக்ஷ 4. என்ற நான்கு நூல்கள், ஸம்பூரணமாகக் கிடைக்கின்றன.

அவைகளிலுள்ள பிழைகளைத் திருத்தித் தமிழில் மொழிபெயர்த்து, அந்நூல்கள், யாவருக்கும் பயன்படவேண்டி தஞ்சை ஸ்ரீ ஸரஸ்வதி மஹால் வெளியீடாகப் பதிப்பித்து வெளியிடப்பட்டிருக்கின்றன.

இந்நூல்கள் யாவும் மக்களுக்கு நல்ல பயனைக் கொடுக்கவேண்டுமென்று எல்லாம்வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

இப்படிக்கு,

K. S. சுப்பிரமணிய சாஸ்திரி

॥ श्रीगणेशाय नमः ॥

॥ स्मृतिसारोद्धारे रत्नपरीक्षा ॥

॥ रत्नोत्पत्तिः ॥

अथेदानीं प्रवक्ष्यामि रत्नादीनां परीक्षणम् ।
येषां परीक्षणान्मर्त्यो लोके ख्यातो भविष्यति ॥ १ ॥

पृच्छन्ति मुनयस्सर्वे कृताञ्जलिपुटाः स्थिताः ।
मेरौ बदरिकायां तमगस्त्यं मुनिपुङ्गवम् ॥ २ ॥

देवदानवगन्धर्वविद्याधरमहोरगाः ।
एतेषां भूषणं भाव्यमन्येषामपि रक्षसाम् ॥ ३ ॥

किरीटे कटिसूत्रे च कुण्डले कण्ठभूषणे ।
कीर्तिवक्त्रे मुद्रिकायां कङ्कणे बाहुभूषणे ॥ ४ ॥

इत्यादिभूषणेष्वेव रत्नसम्मेळनाय च ।
तदुत्पत्तिं परीक्षां च ब्रूहि नो मुनिसत्तम ॥ ५ ॥

THE TANJORE MAHARAJAH SERFOGI'S SARAS... TANJORE

ஸ்மிருதி ஸாரோத்தாரம் - ரத்ன பரீக்ஷை.

ரத்நோத்பத்தி.

(1–5) இனி ரத்னங்களின் பரீக்ஷையைக் கூறுகிறேன். ரத்னங்களின் பரீக்ஷையை அறிந்தவன் உலகில் பிரஸித்தியடைவான்.

மேருமலையில் பதரிகையில் அகத்திய முனிவர் தவம் புரிந்துவந்தார். முனிவர்கள் அவரிடம் சென்று கைகூப்பி, ஓ முனி சிரேஷ்டரே! தேவர் – தானவர் – கந்தர்வர் – வித்தியாதரர் – உரகர் – அசுரர் முதலியவர்களுக்குக் கிரீடம் – அரைஞாண் – குண்டலம் – கண்டாபரணம் – கீர்த்திவக்திரம் – கணையாழி – கங்கணம் – தோள்வளை முதலிய ஆபரணங்களில் ரத்னங்களைப் பதுப்பிக்க வேண்டும். ஆகையால், ரத்னங்களின் உத்பத்தியையும் பரீக்ஷையையும் எங்களுக்குச் சொல்லவேண்டும் என்று பிரார்த்தித்தார்கள்.

अगस्त्य उवाच —

मुनीनां वचनं श्रुत्वा मुनिश्रेष्ठोऽब्रवीद्वचः।
उत्पत्तिमाकरं वर्णगुणदोषांस्तथैव च ॥ ६ ॥

मौल्यमञ्जलिकं चैव मानकं हस्तसंज्ञया।
त्रिदिवस्योपकारार्थं वक्तुं समुपचक्रमे ॥ ७ ॥

(6–7) அதைக் கேட்ட அகஸ்திய முனிவர், தேவர்களுக்கு உபகாரத்திற்காக ரத்னங்களின் உத்பத்தி, அவைகள் கிடைக்கும் இடங்கள், அவைகளின் நிறம், குணம், தோஷம், விலை, எடை போட்டுப் பார்ப்பதற்கு அளவிடும் முறை, எடை, ஹஸ்தஸம்க்ஞை இவைகளைக் கூறலானார்.

पुरा पृथिव्या रत्नानि गर्भे सन्तीह (त्वासन्हि) सर्वशः।
रत्नगर्भेति सा भूमिः ख्याताभूद्भुवनत्रये ॥ ८ ॥

ततो वज्रासुरो नाम बभूवामरसूदनः।
आक्रान्ता रक्षसा तेन त्रिलोकी वज्रदेहिना ॥ ९ ॥

(8–9) முன்பு, ரத்னங்கள் பூமிக்குள் எங்கும் இருந்தன. அதனால் பூமியானது ரத்னகர்பை என்ற பிரஸித்தி பெற்றிருந்தது.

பிறகு, வஜ்ராஸுரன் என்று ஒரு அஸுரன் தோன்றினான். அவன் தேவர்களை அழித்துவந்தான். அவன் வஜ்ரமயமான தேஹம் படைத்திருந்தான். அவன் தனது வலிமையால் மூன்று உலகங்களையும் ஆக்ரமித்துக்கொண்டான்.

सर्वे देवास्ततो जग्मुः राजधानीं शतक्रतोः।
वासवं प्रार्थयामासुः प्रांजलिर्जय जयेति च। १० ॥

देवा ऊचुः —

जय देव महादेव जय त्वं पाकशासन।
जय वासव देवेन्द्र जय त्वं हि शतक्रतो ॥ ११ ॥

जय रुद्र विरूपाक्ष जय शक्र शचीपते।
वृत्रारे जय दैत्यारे दानवेन्द्रं जय प्रभो ॥ १२ ॥

नमो नमस्तेऽखिलदेवदेव नमो नमस्ते द्विसहस्रनेत्र।
देवेन्द्र नस्त्राह्यसुराच्च भीतान् पुनश्च भूयोपि नमो नमस्ते ॥ १३ ॥

इति स्तुत्वा महेन्द्रं तं देवाः प्राञ्जलयः स्थिताः।

(10–14) உடனே, தேவர்கள் எல்லோரும் அமராவதிக்குச் சென்று தேவேந்திரனை வேண்டினார்கள். "ஓ தேவர்களுக்குத் தேவனே! பாகாஸுரனை வதைத்தவனே! நீ ஜயம் அடையவேண்டும். வஸுக்களின் தலைவனே! தேவர்களுக்கு அரசனே! வருந்துகிறவர்களைக் காப்பாற்றுகிறவனே! வ்ருத்ராஸுரனைக் கொன்றவனே! அஸுரர்களின் பகைவனே! வஜ்ராஸுரனைத் தாங்கள் ஜயிக்க வேண்டும். வஜ்ராஸுரனைக் கண்டு நாங்கள் நடுங்குகிறோம். எங்களைக் காப்பாற்ற வேண்டும் என்று வேண்டிக்கொண்டு கைகூப்பி நின்றார்கள்.

THE TANJORE MAHARAJAH SERFOGI'S SA... TANJORE

स्तुत्याऽनया प्रसन्नोऽभूदिन्द्रः प्रत्यब्रवीत्सुरान् ॥ १४ ॥

यदर्थमागता यूयं देवास्त्वग्निपुरोगमाः ।
विदितं भवतां कार्यं साधयिष्यामि तत्सुराः ॥ १५ ॥

कापट्येन ततश्शक्रो ब्राह्मणीं तनुमादधे ।
वज्रासुरः स्थितो यत्र तत्रागात्स पुरन्दरः ॥ १६ ॥

(14–16) இந்த ஸ்துதியைக் கேட்டு ஸந்தோஷமடைந்த இந்திரன், ஓ அக்னி முதலிய தேவர்களே! நீங்கள் வந்திருக்கும் காரணத்தைத் தெரிந்துகொண்டேன். அக்காரியத்தை ஸாதித்துவிடுகிறேன் என்று அவர்களை ஸமாதானம் செய்து அனுப்பினான். உடனே இந்திரன் கபடமாக பிராமண வேஷம் பூண்டு வஜ்ராஸுரன் இருக்குமிடத்திற்குச் சென்றான்.

आयान्तं ब्राह्मणं दृष्ट्वा प्रत्युद्गम्य महासुरः ।
आसनाद्युपचारेण पूजयामास तं द्विजम् ॥ १७ ॥
किमर्थमागतं ब्रह्मन्नाज्ञापय महामुने ।
करिष्यामि हि तं तेऽर्थं यत्ते मनसि वर्तते ॥ १८ ॥

वज्रासुर महाभाग यदि मे मनसि स्थितम् ।
दातुमिच्छसि चेद्देहि शरीरं तव सुन्दरम् ॥ १९ ॥
ज्ञात्वापि दैत्यस्तन्मायां ददौ तस्मै तनुं प्रियाम् ।
शस्त्रैरभेद्यं तस्येन्द्रः तद्वज्रेणाहरच्छिरः ॥ २० ॥

(17–20) வஜ்ராஸுரன், பிராமணன் வருவதைக் கண்டு எதிர்கொண்டு அழைத்து, அவரை ஆஸனாதி உபசாரங்களால் பூஜித்து, தாங்கள் வந்த காரியம் என்ன? தங்கள் மனதிலிருப்பதைச் சொல்லவேண்டும், தங்கள் விருப்பத்தைப் பூர்த்திசெய்கிறேன் என்றான். உடனே, பிராமண வேஷம் பூண்ட இந்திரன்,

மஹா பாக்யவானான ஹே வஜ்ராஸுர! நீ எனது விருப்பத்தைப் பூர்த்திசெய்ய விரும்பினால் உன் அழகிய சரீரத்தை எனக்குக் கொடுக்க வேண்டும், என்று கேட்டான். வஜ்ராஸுரன், இது கபடமென்றறிந்தும், தனது சரீரத்தை அவருக்குக் கொடுத்துவிட்டான். உடனே, பிராமண வேடம் பூண்டிருந்த இந்திரன், வஜ்ராஸுரனுடைய சிரஸ்ஸைத் தனது வஜ்ராயுதத்தால் துண்டித்தான்.

शक्रेण निहते दैत्ये तस्मिन्वज्रासुरे ततः ।
दिवि दुन्दुभयो नेदुः ननृतुश्चाप्सरोगणाः ॥ २१ ॥
तस्य देहाद्विनिष्क्रान्ताः समस्ता रत्नजातयः ।
तेषां मध्ये मुख्यरत्नं वज्रसंज्ञा कृता सुरैः ॥ २२ ॥
शिरोवक्षोद्भता विप्रा बाहुजाः क्षत्रियाः स्मृताः ।
नाभेर्जातास्तथा वैश्यास्तत्पद्भ्यां शूद्रजातयः ॥ २३ ॥

(21–23) உடனே தேவர்கள் ஆகாயத்தில் துந்துபி வாத்தியத்தை முழக்கினார்கள். அப்ஸரஸ்ஸுகள் நடனம் செய்தார்கள். அவனது உடலிலிருந்து எல்லாவித ரத்ன ஜாதிகளும் உண்டாயின. தேவர்கள் அவைகளில் சிறந்த ரத்னத்திற்கு வஜ்ரம் என்று பெயரிட்டனர். அவைகளில், தலை, மார்பு இவைகளில் உண்டானவைகள் பிராஹ்மண ஜாதியாம். கைகளில் உண்டானவை க்ஷத்திரிய ஜாதியாம். நாபியிலுண்டானவை வைசிய ஜாதியாம். கால்களில் உண்டானவை சூத்திர ஜாதியாம்.

ततो देवोरगैस्सिद्धैर्यक्षराक्षसकिन्नरैः ।
गृहीतं रत्नजालं तत् शिष्टं मर्त्ये प्रकाशितम् ॥ २४ ॥
अष्टौ वज्राकराः श्रेष्ठा युगच्छन्दानुवर्तिनः ।
द्वौ द्वौ तेष्वनुवर्तेते कृतादिषु यथाक्रमम ॥ २५ ॥
यान्ति चाल्पप्रमाणत्वं युगनाशे विनाशिताः ।
वज्राश्शक्रस्य माहात्म्यादाकरादेवमाकरम् ॥ २६ ॥
वज्रस्य मौल्यं यः कुर्याद्गुणं दोषं परीक्ष्य च ।
अश्वमेधाधिको धर्मः तस्य स्यात्तु मुनीश्वराः ॥ २७ ॥

(24–27) பிறகு, தேவர்கள், உரகர்கள், ஸித்தர்கள், யக்ஷர்கள், கின்னரர்கள், ஆகியவர்கள் அந்த ரத்னங்களை எடுத்துச் சென்றனர். அதில் மிகுந்ததே இப்புவியில் பிரகாசப்படுத்தப்பட்டது. இப்புவியில் வஜ்ரம் கிடைக்குமிடங்கள் எட்டு. அவைகளில் கிருதாதி யுகங்கள்தோறும் இரண்டிரண்டு ஆகரங்கள்

காணப்படுகின்றன. அவைகள் யுகத்தின் முடிவில் நாசம் செய்யப்பட்டு சிறிதாக ஆகின்றன. வஜ்ரங்கள் இந்திரனுடைய பெருமையால் இவ்விதம் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்தில் மாறுகின்றன. வஜ்ரங்களின் குணங்களையும் தோஷங்களையும் பரீக்ஷித்துப் பார்த்து, அதன் விலையை நிர்ணயிப்பவனுக்கு அசுவமேதம் செய்வதைக்காட்டிலும் அதிகமான புண்ணியம் கிடைக்கும்.

यो न वेत्ति गुणं दोषं मौल्यं कुर्यादयुक्तितः ।
तस्य मूर्ध्नि पतेद्वज्रं पर्वतानामिव ध्रुवम् ॥ २८ ॥

ब्राह्मणाः क्षत्रिया वैश्याः शूद्राश्चैव चतुर्विधाः ।
स्त्रीपुंनपुंसकाश्चैव त्रिधा ते लिङ्गनिर्णयात् ॥ २९ ॥

वज्रादयोऽपि ये केचित्तेजोवन्तो बृहत्तराः ।
वृत्तास्ते पुरुषा ज्ञेया बिन्दुरेखाविवर्जिताः ॥ ३० ॥

(28-30) குணமோ, தோஷமோ தெரிந்துகொள்ளாமல் யுக்தி இல்லாமல் வஜ்ரத்தின் விலையை மதித்தால், மலைமீது இடி விழுவதுபோல அவன் தலையில் இடிவிழும்; இது நிச்சயம்.

வஜ்ரத்தில் பிராமண ஜாதி, க்ஷத்திரிய ஜாதி, வைச்ய ஜாதி, சூத்ர ஜாதி என்று நான்கு ஜாதிகள். அவைகள் ஒவ்வொன்றிலும் ஸ்திரீ ஜாதி, புருஷ ஜாதி, நபும்ஸக ஜாதி என்று மூன்று பேதங்கள்.

வஜ்ராதி ரத்னங்களில் நல்ல ஒளி, பெரிய உருவம், வட்டவடிவம், இவைகள் உள்ளவைகளாகவும், பிந்து, ரேகை இல்லாமலுமிருப்பவைகள் புருஷ ஜாதிகளாம்.

रेखाबिन्दुसमायुक्ताः खण्डशस्ताः स्त्रियः स्मृताः ।
सुतेजसः सत्त्ववन्तो भूषणे तान्नियोजयेत् ॥ ३१ ॥

त्रासः काकपदं रेखा सौक्ष्म्यं स्फुटितबिन्दवः ।
मालिन्यमपि यस्य स्युः तत्क्लीबं स्यात्कनिष्ठकम् ॥ ३२ ॥

पुंलिङ्गं सुमहारत्नं यस्य गेहेऽस्ति सर्वदा ।
तस्य भाग्यवतो भूयात् पुरुषार्थचतुष्टयम् ॥ ३३ ॥

स्त्रीलिङ्गरत्नं मुनयो यस्य कोशेऽस्ति नित्यशः ।
स्त्रीरत्नं च लभेत्तस्य पुत्रपौत्रादिकं फलम् ॥ ३४ ॥

(31-34) கோடுகள், புள்ளிகள் உள்ளவைகளாய்ச் சிறிய உருவமுள்ளவை

கள், ஸ்திரீ ஜாதி ரத்னங்களாம். இவைகளில் நல்ல ஒளியுள்ளவைகள் சிறந்தவைகளாம். அவைகளை ஆபரணங்களில் இழைக்கவேண்டும்.

த்ராஸம் (கல்லின் உட்புறத்தில் பொரிசல் அல்லது கொப்பளம்), காகபதம், ரேகை, சிறிய உருவம், உடைந்து சிதறிய புள்ளிகள், அழுக்கு இவைகளுள்ள கற்கள் நபும்ஸக ஜாதிகளாம். இவைகள் கடைத்தரமானவைகள்.

பெரியதான புருஷஜாதி ரத்னத்தை வீட்டில் வைத்திருப்பவன் பாக்கியவானாக இருப்பான். நான்குவித புருஷார்த்தங்களையும் அடைவான்.

ஓ முனிவர்களே! ஸ்திரீ ஜாதி ரத்னங்களைத் தனது பொக்கிஷத்தில் வைத்திருப்பவன் சிறந்த ஸ்திரீயை அடைவான். புத்திரர்களையும், பௌத்திரர்களையும் அடைவான்.

क्लीबरत्नं गृहे यस्य वीर्यहानिर्दरिद्रता ।
भवेत्तच्च त्यजेद्धीमान् दुःखशोकभयप्रदम् ॥ ३५ ॥

इति रत्नोत्पत्तिः समाप्ता ॥

(35) நபும்ஸக ரத்னங்களை வைத்திருப்பவன் வீரியத்தை இழப்பான். தாரித்திரியத்தை அடைவான். அது துக்கத்தையும் சோகத்தையும் பயத்தையும் கொடுக்கும். ஆகையால் அதை ஒதுக்கிவிட வேண்டும்.

ரத்னோத்பத்தி முற்றும்.

अथ गुणदोषौ ॥

रत्नानि धारयेत्कोशे शुद्धानि गुणवन्ति च ।
संभवं च तथा जातिं गुणं तेषां परीक्ष्य च ॥ १ ॥

कृते युगे कलिङ्गेषु कोसले वज्रसंभवः ।
हिमालये मतङ्गाद्रौ त्रेतायां कुलिशोद्भवः ॥ २ ॥

पौण्ड्रकेषु सुराष्ट्रे च द्वापरे पविसन्ततिः ।
वैराकरे च सोपाने कलौ हीरकसंभवः ॥ ३ ॥

குண தோஷங்கள்.

(1–3) ரத்னங்களின் உத்பத்தி, ஜாதி, குணம் இவைகளைப் பரீக்ஷித்துப்

பார்த்து அவைகளில் தோஷமில்லாமல் குணமுள்ள ரத்னங்களைப் பொக்கிஷத்தில் வைத்துக் காப்பாற்ற வேண்டும்.

கிருதயுகத்தில் கலிங்க தேசத்திலும், கோஸல தேசத்திலும் வஜ்ரம் உண்டாயிற்று. திரேதா யுகத்தில் இமயமலையிலும் மதங்க பர்வதத்திலும் உண்டாயிற்று. துவாபர யுகத்தில் பௌண்டிரகம் – ஸௌராஷ்டிரம் – இரண்டு இடங்களிலும் உண்டாயிற்று. கலியுகத்தில் வைராகரம், ஸோபானம் இரண்டு இடங்களிலும் உண்டாயிற்று.

गुणाः पञ्च समाख्याता दोषाः पञ्च प्रकीर्तिताः ।
छायाश्चतस्रो विज्ञेया वज्राणां रत्नकोविदैः ॥ ४ ॥

षट्कोणत्वं लघुत्वं च समाष्टदलता तथा ।
तीक्ष्णाग्रहा (ता ?) निर्मलत्वं इति पञ्च गुणाः स्मृताः ॥ ५ ॥

मलो बिन्दुस्तथा रेखा त्रासः काकपदं च यत् ।
एते दोषास्समाख्याताः पञ्च रत्नेषु कोविदैः ॥ ६ ॥

श्वेता रक्ता तथा पीता कृष्णा छाया चतुर्विधा ।
विप्रक्षत्रियवैश्यानां शूद्रजातेर्यथाक्रमम् ॥ ७ ॥

(4–7) வஜ்ரங்களின் குணங்கள் ஐந்து. தோஷங்கள் ஐந்து. சாயை (நிறம்) நான்கு விதம். இவைகளைத் தெரிந்துகொள்ள வேண்டும்.

அறுகோணமாக இருத்தல், கனமில்லாமல் இருத்தல், ஸமவடிவமுள்ள எட்டு தளமாக இருத்தல், முனை கூர்மையாக இருத்தல், அழுக்கு இல்லாதிருத்தல் என வஜ்ரத்தின் குணங்கள் ஐந்து. மலம் (அழுக்கு அல்லது மங்கல்) பிந்து (புள்ளி) ரேகை (கோடு) திராஸம் (சிதைவு அல்லது பொரிசல்) காகபதம் (காக்கையின் கால்போன்ற கோடு) என ஐந்து தோஷங்கள்.

வெளுப்பு, சிவப்பு, மஞ்சள், கருப்பு என நான்குவித நிறங்கள். இந்நான்கு நிறங்களும் முறையே பிராம்ஹண – க்ஷத்திரிய – வைச்ய – சூத்ர ஜாதிகள் தரிக்கத் தக்கவைகளாம்.

यज्ञैर्दानैस्तपोभिश्च यदाप्नोति तदाप्नुयात् ।
गुणयुक्तस्य वज्रस्य विप्रजातेर्विधारणात् ॥ ८ ॥

जयः पराक्रमस्तस्य शत्रुनाशश्च जायते ।
गुणवत्क्षत्रजातीयं वज्रं वसति यद्गृहे ॥ ९ ॥

कलाकुशलता द्रव्यं प्रजाक्षेमं यशो महत् ।
गुणिनः पविरत्नस्य वैश्यजातेर्विधारणात् ॥ १० ॥

परोपकारिता दाक्ष्यं धनधान्यसमृद्धयः ।
गुणयुक्तस्य वज्रस्य शूद्रजातेर्विधारणात् ॥ ११ ॥

(8–11) குணமுள்ள பிராம்ஹண ஜாதி வஜ்ரத்தைத் தரிப்பவன் யக்ஞம், தானம், தபஸ்ஸு இவைகளால் அடையக்கூடிய பலன்களை அடைவான்.

குணமுள்ள க்ஷத்திரிய ஜாதி வஜ்ரத்தை வீட்டில் வைத்திருப்பவன் ஜயம், பராக்கிரமம், சத்துரு நாசம் இவைகளை அடைவான்.

குணமுள்ள வைச்ய ஜாதி வஜ்ரத்தைத் தரிப்பவன் கலா ஸாமர்த்தியம், பதார்த்தங்கள், பிரஜைகளின் க்ஷேமம், புகழ் இவைகளை அடைவான்.

குணமுள்ள சூத்திர ஜாதி வைரத்தைத் தரித்தால் பரோபகாரம் செய்தல், ஸாமர்த்தியம், தன தானிய ஸமிருத்தி இவைகள் உண்டாகும்.

मले मलिनता ख्याता धारणाद्दंष्ट्रिणो भयम् ।
कोणे व्याधिभयं प्रोक्तं मध्ये न हि भयं भवेत् ॥ १२ ॥

दोषेषु बिन्दुरावर्तः परिवर्तो यवाकृतिः ।
चतुर्धैवं समाख्याता बिन्दवो वज्रसंस्थिताः ॥ १३ ॥

रक्तोऽत्र वर्तुलो बिन्दुरावर्तः सव्यवर्तनः ।
रक्तश्च परिवर्तस्तु रक्त एवापसव्यकः ॥ १४ ॥

(12–14) மல தோஷமுள்ளது அழுக்கடைந்ததைப்போல ஒளி மங்கியிருக்கும். அதைத் தரித்தால் விஷப் பல் உள்ளவைகளால் (பாம்பு முதலியவைகளால்) பயம் உண்டாகும்.

ஓரத்தில் அழுக்கு இருந்தால் வியாதி, பயம் உண்டாகும். அழுக்கு நடுவிலிருந்தால் பயமில்லை.

பிந்து (புள்ளி) என்ற தோஷமானது, பிந்து, ஆவர்த்தம், பரிவர்த்தம், யவை, என நான்கு விதமாகக் கூறப்பட்டிருக்கின்றது. பிந்து என்பது சிவப்பாகவும் வட்டமாகவும் இருக்கும். ஆவர்த்தம் என்பது சிவப்பாகவும் வட்டமாகவும் வலமாகச் சுழித்தும் இருக்கும். பரிவர்த்தமென்பது சிவப்பாகவும் வட்டமாகவும், இடமாகச் சுழித்தும் இருக்கும்.

बिन्दुरायुर्धनं हन्यादावर्तो भयमावहेत् ।

परिवर्ते भवेद्व्याधिर्यवे तु फलमुच्यते ॥ १५ ॥

स च रक्तस्तथा पीतः श्वेतश्चेति त्रिधा मतः ।
रक्तवर्णयवे ख्यातं गजाश्वानां विनाशनम् ॥ १६ ॥

यवः पीतः कुलस्यान्तं धनमायुः सिते भवेत् ।
एवं दोषा गुणाश्चोक्ता यवबिन्दोरशेषतः ॥ १७ ॥

(15–17) பிந்து தோஷமானது, ஆயுள், தனம் இவைகளை நாசம் செய்து விடும். ஆவர்த்தம் என்ற தோஷம் பயத்தையுண்டுபண்ணும். பரிவர்த்தம் என்ற தோஷம் வியாதியை உண்டுபண்ணும்.

யவையின் பயனைக் கூறுகிறேன். யவையானது சிகப்பு, மஞ்சள், வெளுப்பு என மூன்று விதமாம். யவை சிகப்பாக இருந்தால் யானை குதிரைகள் அழியும். யவை மஞ்சள் நிறமாக இருந்தால் குலத்தையே அழித்துவிடும். யவை வெளுப்பு நிறமாக இருந்தால் தனத்தையும் ஆயுளையும் விருத்திசெய்யும் என யவை (யவை தானியத்தைப்போன்ற உருவம்) என்ற பிந்து (புள்ளி) வின் தோஷங்களும் குணங்களும் முழுமையும் கூறப்பட்டன.

THE TANJORE MAHARAJAH SERFOGI'S SARA
TANJORE

अथ रेखा —

सव्यवक्त्रा शुभा रेखा वामवक्त्रा भयङ्करी ।
छेदभ्रान्तिकरी छेदा रेखा शस्त्रभयङ्करी ॥ १८ ॥

पक्षद्वयप्रदृश्या या छेदगा सा प्रकीर्तिता ।
रेखा बन्धुविनाशाय जायते वक्त्रसंस्थिता ॥ १९ ॥

(18–19) இனி ரேகையை (ரேகை = கோடு) க் கூறுகிறேன். ஸவ்ய வக்த்ரம் = (வலது பக்கத்தில் முகம்) வாமவக்த்ரம் (இடது பக்கத்தில் முகம்) சேதம் = (நடுவில் விட்டிருப்பது) ரேகை (நடுவில் விடாமல் தொடர்ச்சியாக இருக்கும் கோடு) இருபக்கங்களிலும் முகப்புபோல் காணப்பட்டால் அதற்கு சேதகம் என்று பெயர். இவ்விதமாக ரேகா தோஷங்கள் ஐந்து விதமாகும். இவைகளில்:—

வலது பக்கத்தில் முகப்பு உள்ளது சுபமானது. சுப பலனைக் கொடுக்கும்.

இடது பக்கத்தில் முகப்பு உள்ளது பயத்தை உண்டுபண்ணும்.

நடுவில் விடுபட்ட கோடு வெட்டுக்காயத்தையும், சித்தப் பிரமையையும் உண்டுபண்ணும்.

ஸாதாரணமான கோடு ஆயுதத்தால் பயத்தை உண்டுபண்ணும்.

இருபக்கங்களிலும் முகப்பு அல்லது கத்தரிக்கப்பட்டதுபோல் காணப்படும் "சேதகா" என்ற கோடு காணப்பட்டால் அந்த வஜ்ர ரத்னம் பந்துக்களின் அழிவையுண்டுபண்ணும்.

भिन्नं भ्रान्तिकरं त्रासः सन्त्रासं जनयेत्स्फुटम् ।
अङ्कः काकपदाकारो दृश्यते यः पवौ स्थितः ॥ २० ॥

स मृत्युमादिशत्याशु धनं वा सकलं हरेत् ।
भग्नाग्रं भग्नधारं च दळहीनं चतुर्दळम् ॥ २१ ॥

कान्तिहीनं च यद्वज्रं दोषाय न गुणाय तत् ।
एवं दोषा गुणाः प्रोक्ता वज्राणां सोमभूभुजा ॥ २२ ॥

इति वज्रपरीक्षा संपूर्णा ॥

(20–22) வைரம் உடைந்திருந்தால் சித்தப்பிரமையை உண்டுபண்ணும். திராஸம் (சிதைந்தது போலவோ அல்லது கொப்பளமுள்ளதுபோலவோ காணப்படுவது) என்ற தோஷம் காணப்பட்டால் மனதுக்கு பயத்தை உண்டுபண்ணும்; நிச்சயம். வஜ்ரத்தில் காக்கையின் காலைப்போல காணப்பட்டால் அந்தக் காகபதமென்ற தோஷம் அதிசீக்கிரத்தில் மரணத்தைக் கொடுக்கும், அல்லது செல்வம் யாவும் அழிந்து விடும். தலைப்பு உடைந்தது, முனை உடைந்தது, தளமில்லாதது, நான்கு தளமாக உள்ளது, ஒளி இல்லாதது இவைகள் தோஷத்தை (கெடுதலை) உண்டுபண்ணும். நன்மையை உண்டுபண்ணாது என்று ஸோமபூபாலன் வஜ்ர ரத்னத்தின் தோஷங்களையும் குணங்களையும் கூறியுள்ளார்.

வஜ்ர பரீக்ஷை முற்றும்.

अथ मुक्ता ॥

इभाहिघनमत्स्यानां शीर्षे मुक्ताफलोद्भवः ।
त्वक्सारशुक्तिशङ्खानां गर्भान्मुक्ताफलोद्भवः ॥ १ ॥

धाराधरेषु जायेत मौक्तिकं जलबिन्दुभिः ।
दुर्लभं तन्महारत्नं देवैस्तन्नीयतेऽम्बरात् ॥ २ ॥

முத்துக்களின் பரீக்ஷை.

(1–2) யானை, பாம்பு, மேகம், மத்ஸ்யம்–இவைகளின் தலையில் முத்துக்கள் உண்டாகின்றன. மூங்கில், சிப்பி, சங்கு இவைகளின் கர்ப்பத்தில் முத்துக்

கள் உண்டாகின்றன. மேகங்களில் ஜலபிந்துக்கள் விழுந்து அவைகள் முத்துக்களாக ஆகின்றன. இந்த முத்துக்களை தேவர்கள் ஆகாசத்திலேயே எடுத்துச் சென்றுவிடுகிறார்கள். ஆகையால் இவைகள் கிடைப்பது அரிது.

गजाहिजं सुदुष्प्रापं मौक्तिकं तपसा विना ।
मौक्तिकं शुक्तिजं लभ्यमाकरेषु कलौ नृभिः ॥ ३ ॥

कुक्कुटाण्डसमं वृत्तं मौक्तिकं निबिडं गुरु ।
घनजं भानुसंकाशं देवयोग्यममानुषम् ॥ ४ ॥

काम्भोजकुम्भिसंभूतं धात्रीफलनिभं समम् ।
आताम्रपिञ्जरच्छायं मौक्तिकं मन्ददीधिति ॥ ५ ॥

(3–5) யானை, பாம்பு இவைகளின் தலையில் உண்டாகும் முத்துக்கள் தவம் செய்யாதவர்களுக்குக் கிடைப்பதரிது. இக்கலியில் சிப்பிகளில் உண்டாகும் முத்துக்கள் (ஸமுத்திரத்தில்) ரத்னாகரங்களில் மனிதர்களுக்குக் கிடைக்கக்கூடியவைகள். மேகத்தில் உண்டாகும் முத்தானது கோழி முட்டையைப் போலவும் வட்ட வடிவமாகவும் அழுத்தமாகவும் கனமாகவும் சூரிய ஒளியைப் போல் மிகவும் பிரகாசமுள்ளதாகவும் இருக்கும். இது தேவர்கள் தரிக்கத் தக்கது. மனிதர்களுக்குக் கிடைப்பது அரிது.

காம்போஜ தேசத்திய கஜத்தின் மஸ்தகத்தில் உண்டாகும் முத்துக்கள் நெல்லிக்கனியைப்போன்ற உருவம், காத்திரம், ஓரங்களில் சிவப்பான மஞ்சள் நிறம், மங்கலான பிரகாசம், இவைகளுள்ளதாக இருக்கும்.

फणिजं वर्तुलं रम्यं नीलच्छायं महाद्युति ।
पुण्यहीना न पश्यन्ति वासुकेः कुलसंभवम् ॥ ६ ॥

कोलकं कोलसदृशं तद्दंष्ट्रासदृशच्छवि ।
अलभ्यं मनुजै रत्नं मौक्तिकं पुण्यवर्जितैः ॥ ७ ॥

(6–7) ஸர்ப்பத்தின் தலையில் உண்டாகும் (நாகரத்னம் எனப்படும்) முத்தானது வட்டவடிவமாகவும், மிக ரமணீயமாகவும், நீல நிறமாகவும், மிகுந்த ஒளியுள்ளதாகவும் இருக்கும். வாஸுகியின் குலத்தில் உண்டாகும் இந்த ரத்னத்தைப் புண்ணியம் செய்யாதவர்கள் கண்ணாலும் பார்க்க முடியாது.

காட்டுப்பன்றியின் தலையில் உண்டாகும் முத்து பன்றியைப்போன்ற வடிவமும் அதன் பல்லின் ஒளியும் உடையதாக இருக்கும். இது புண்ணியம் செய்யாதவர்களுக்குக் கிடைப்பதரிது.

गुञ्जाफलसमस्थौल्यं तिमिजं मौक्तिकं लघु ।
पाटलीपुष्पसदृशं मन्दजा(त्यो) सुवर्तुलम् ॥ ८ ॥

वंशजं शशिसंकाशं कङ्कोलीफलमात्रकम् ।
प्राप्यते बहुभिः पुण्यैः तद्रक्ष्यं वेदमन्त्रतः ॥ ९ ॥

वर्षोपलसमं दीप्त्या पाञ्चजन्यकुलोद्भवम् ।
कपोताण्डप्रमाणं तत् कान्तं पापहरं शुभम् ॥ १० ॥

(8–10) திமி என்ற மத்ஸ்ய விசேஷத்தின் தலையிலுண்டாகும் முத்தானது குன்றிமணியின் காத்திரமுள்ளதாகவும் லேசாகவும் இருக்கும். பாதிரிப்பூ (வின் நிறம்) வைப்போலவும் ஒளி குன்றியும் நல்ல வட்ட வடிவமாகவும் இருக்கும்.

மூங்கிலில் உண்டானது சந்திரனைப்போன்ற பிரகாசமுடையது. அசோக (மகிழம் விதை) பழத்தின் அளவுள்ளதாகவும் இருக்கும். இது வெகுவாக புண்ணியம் செய்தவர்களுக்குத்தான் கிடைக்கும். இதை வேத மந்திரங்களால் ரக்ஷைசெய்து காப்பாற்ற வேண்டும். சங்குகளில் உண்டாகும் முத்துக்கள் ஆலங்கட்டியின் நிறம், புரு முட்டையின் காத்திரம், நல்ல ஒளி இவைகளையுடையதாம். இது சிறந்தது. பாபங்களைப் போக்கும்.

शुक्तिजं त्वम्बुधेर्मध्ये सिंहले चारवाटके ।
पारसीके बर्बरे च भवेन्मुक्ताफलं शुभम् ॥ ११ ॥

स्वात्यां स्थिते रवौ मेघैर्ये मुक्ता जलबिन्दवः ।
ते शीर्णाः शुक्तिभिर्मुक्ताः (पीताः) जायन्ते निर्मलत्विषः ॥ १२ ॥

(11–12) சிப்பியிலுண்டாகும் முத்தானது சிங்களம், ஆரவாடம், பாரஸீகம், பர்பரம் இந்த இடங்களில் ஸமுத்திர மத்தியில் உண்டாகின்றது. ஸ்வாதியில் சூரியன் ஸஞ்சரிக்கையில் மேகத்திலிருந்து விழும் ஜலபிந்துக்கள் சிதறி அவைகளை சிப்பிகள் உட்கொள்ளுவதால் இந்த முத்து உண்டாகிறது. இது மங்கலாக இல்லாமல் ஒளியுள்ளதாக இருக்கும். இது சிறந்தது.

स्थूला मध्यास्तथा सूक्ष्माः बिन्दुमानानुसारतः ।
भवन्ति मुक्तास्तासां च मौल्यं तन्मानरूपतः ॥ १३ ॥

रुक्मिण्याख्या भवेच्छुक्तिः तस्यां जातं प्रमौक्तिकम् ।
निर्मलं कुङ्कुमच्छायं जातीफलसमं वरम् ॥ १४ ॥

अमौल्यं तद्विनिर्दिष्टं रत्नलक्षणकोविदैः ।
दुर्लभं नृपयोग्यं तत् स्वल्पभाग्यैर्न लभ्यते ॥ १५ ॥

(13–15) சிப்பியில் உண்டாகும் முத்துக்கள் மேகஜல பிந்துக்களின் அளவை அனுஸரித்து பெரிதாகவும், நடுத்தரமாயும், சிறிதாகவும் இருக்கும். இவைகளின் விலை இவைகளின் காத்திரத்தைப் பொருத்ததேயாம்.

ருக்மிணி என்ற சிப்பியில் உண்டாகும் முத்துக்கு ப்ரமௌக்திகம் (சிறந்த முத்து) என்று பெயர். இது சுத்தமாகவும், குங்கும நிறமுள்ளதாகவும், ஜாதிக்காயின் காத்திரமுள்ளதாகவும் இருக்கும். இது மிகச் சிறந்தது. ரத்ன பரீக்ஷையில் கைதேர்ந்தவர்கள் இதற்கு விலை மதிப்பே கிடையாது என்று கூறுகின்றனர். இது கிடைப்பதரிது. இது அரசர்கள் தரிக்கத்தக்கது. ஸ்வல்ப பாக்கியம் செய்தவர்களுக்குக் கிடைக்காது.

सुस्निग्धं मधुरच्छायं मौक्तिकं सिंहलोद्भवम् ।
आरवाटसमुद्भूतं पीतच्छायं सुनिर्मलम् ॥ १६ ॥

पारसीकोद्भवं स्वच्छं सितं मुक्ताफलं शुभम् ।
ईषत्श्यामं च रूक्षं च मौक्तिकं बर्बरोद्भवम् ॥ १७ ॥

(16–17) சிம்ஹளத்தில் உண்டான முத்தானது வழவழப்பும் இனிமையான நிறமும் உள்ளது.

ஆரவாடத்தில் உண்டான முத்து மஞ்சள் நிறமாகவும், சுத்தமாகவும் இருக்கும்.

பாரஸீகத்தில் உண்டான முத்து நிர்மலமாகவும் வெண்மையாகவும் இருக்கும். இது சிலாக்கியமானதாம்.

பர்பர தேசத்திலுண்டாகும் முத்தானது சிறிது பசுமையாகவும் பளபளப்பு இல்லாமலும் இருக்கும்.

चत्वारः स्युर्महादोषाः षणमध्याः परिकीर्तिताः ।
एवं दश समाख्यातास्तेषां वक्ष्यामि लक्षणम् ॥ १८ ॥

यत्रैकदेशसंलग्नः शुक्तिखण्डो विभाव्यते ।
शुक्तिलग्नः समाख्यातः स दोषः कुष्ठकारकः ॥ १९ ॥

मीनलोचनसंकाशो दृश्यते मौक्तिके तु यः ।
मत्स्याक्षस्स तु दोषः स्यात्पुत्रनाशकरो ध्रुवम् ॥ २० ॥

दीप्तिहीनं गतच्छायं जरठं तद्विदुर्बुधाः ।
दारिद्र्यजननं यस्मात्तस्मात्तत्परिवर्जयेत् ॥ २१ ॥

(18–21) முத்துக்களின் மஹா தோஷங்கள் நான்கு. நடுத்தரமான தோஷங்கள் ஆறு. ஆகப் பத்து தோஷங்களின் இலக்கணத்தைக் கூறுகிறேன்.

முத்தின் ஒரு பக்கத்தில் சிப்பி ஒட்டிக்கொண்டிருக்கும். இதற்கு சுக்தி லக்னம்=சிப்பி சேர்ந்தது என்று பெயர். இந்த தோஷமுள்ளது குஷ்ட ரோகத்தை உண்டுபண்ணும்.

முத்தில் மீன் கண்போலக் காணப்படும். இந்த தோஷத்திற்கு மத்ஸ்யாக்ஷம்=மீன் கண் என்று பெயர். இது நிச்சயமாக புத்திர நாசத்தை உண்டுபண்ணும்.

ஒளியழிந்து நிறம் குன்றிய முத்துக்கு ஜரடம்=கிழடு (நாள்ப்பட்டு உருக்குலைந்தது) என்று பெயர். இது தாரித்திரியத்தையுண்டுபண்ணும். ஆகையால் இதை நீக்கிவிடவேண்டும்.

मौक्तिकं विद्रुमच्छायमतिरक्तं विदुर्बुधाः ।
तस्मिन्सन्धारिते मृत्युर्जायते नात्र संशयः ॥ २२ ॥

उपर्युपरि तिष्ठन्ति वलयो यत्र मौक्तिके ।
त्रिवृतं नाम तत्ख्यातं दुर्लभत्व ? विधायकम् ॥ २३ ॥

अवृत्तच(व)लनं यत्तु चर्पटं तन्निगद्यते ।
मौक्तिकं ध्रियते येन तस्याकीर्तिर्भवेत्सदा ॥ २४ ॥

(22–24) பவழ நிறமுள்ள முத்துக்கு அதிரக்தம் என்று பெயர். அதைத் தரித்துக் கொண்டால் மரணமடைவான். ஸந்தேகமே இல்லை.

முத்தில் ஒன்றுக்கு மேலொன்றாக வளையங்களிருக்கும். இந்த தோஷத்திற்கு திருவிருதம் (மூன்று வளையங்களுள்ளது) என்று பெயர். இதைத் தரிப்பவன் (ஸங்கடங்களிலிருந்து மீளுவது ?) துர்லபமாம்.

முத்தில் வட்டமாக இல்லாமல் சுழிகளிருந்தால் அந்த தோஷத்திற்கு சர்படம் என்று பெயர். இதைத் தரிப்பவனுக்கு எப்பொழுதும் அபகீர்த்தி உண்டாகும்.

त्रिकोणं तु समाख्यातं सौभाग्यक्षयकारकम् ।
दीर्घं यत्तु कृशं प्रोक्तं यशोत्रिध्वंसकारकम् ॥ २५ ॥
निर्भुग्नमेकतो यत्तु कृशपार्श्वं तदुच्यते ।

सदोषं मौक्तिकं नित्यं निरुद्योगकरं हि तत् ॥ २६ ॥

अवृत्तं पीठकोपेतं खण्डसंभिन्नरूषितम् ।
अरम्यं गुणहीनं च स्वल्पमौल्यं हि मौक्तिकम् ॥ २७ ॥

(25–27) முக்கோண வடிவமான முத்து ஸௌபாக்கியத்தை அழித்துவிடும்.

நீண்டு (காத்திரமாக இல்லாமல்) இருக்கும் முத்துக்கு க்ருசம் (சிம்பியது) என்று பெயர். இது புகழை அழித்துவிடும்.

ஒரு பக்கத்தில் ஒடுக்கு விழுந்ததற்கு க்ருசபார்ச்வம் (பக்கத்தில் ஒடுக்கு விழுந்தது) என்று பெயர். இந்த தோஷம் உத்தியோகமற்றவனைச் செய்து விடும்.

வட்ட வடிவமாக இல்லாதது, பீடமுள்ளது = (அடிப்பக்கத்தில் பீடம் போல் மட்டமாக இருப்பது அதாவது ஸமதரையில் வைத்தால் உருண்டு ஓடாமல் பலகையைப் போல் வைத்த இடத்திலேயே அசையாமலிருக்கும்படி அகன்று இருப்பது), உடைந்தது, விரிசலுள்ளது, சுருக்கமுள்ளது, பார்வைக்கு ரமணீயமாக இல்லாதது, நல்ல குணமில்லாதது, இந்த முத்துக்கள் குறைந்த விலையுள்ளவைகளாகும்.

तारकाद्युतिसंकाशं सुतारं तन्निगद्यते ।
सुवृत्तं मौक्तिकं यत्स्याद्गुणवत्तत्प्रकीर्त्यते ॥ २८ ॥

स्वच्छं दोषविनिर्मुक्तं निर्मलं मौक्तिकं मतम् ।
गुरुत्वं तोलने यस्य शशिबिम्बसमं च यत् ॥ २९ ॥

वृत्तं रेखाविहीनं तत् स्निग्धमस्फुटितं शुभम् ।
इति सर्वगुणोपेतं मौक्तिकं येन धार्यते ॥ ३० ॥

तस्यायुर्वर्धते लक्ष्मीः सर्वपापं प्रणश्यति ।

(28–31) நக்ஷத்திரத்தின் ஒளியைப்போன்ற ஒளியுடைய முத்துக்கு "ஸுதாரம்" என்று பெயர்.

நல்ல வட்ட வடிவமான (உருண்டை வடிவமான) முத்துக்கு "குணவத்" என்று பெயர்.

தோஷமில்லாமலிருப்பதுடன் நல்ல ஒளி வீசும் முத்துக்கு "நிர்மலம்" என்று பெயர்.

எடையில் அதிகப்பளுவும் சந்திரபிம்பம் போன்றும் வட்டவடிவமும் கோடு விரிசல், ஒடைசல் இல்லாமலும் இருக்கும் முத்துக்கு "ஸ்நிக்தம்" (மனோஹரம் அல்லது பளபளப்பு) என்று பெயர்.

இத்தகைய ஸகல விதமான குணங்களுடன் கூடிய முத்தைத் தரிப்பவனுக்கு ஆயுள் விருத்தியடையும். செல்வம் விருத்தியடையும். ஸகல பாபங்களும் நசிக்கும்.

चतुर्धा मौक्तिकच्छाया पीता च मधुरा सिता ॥ ३१ ॥

नीला चेति समाख्याता रत्नतत्वपरीक्षकैः ।

पीता लक्ष्मीप्रदा ज्ञेया मधुरा बुद्धिवर्धिनी ॥ ३२ ॥

सिता यशस्करी च्छाया नीला सौभाग्यनाशिनी ।

(31–33) முத்துக்களுக்கு மஞ்சள்–மதுரம்–வெளுப்பு–நீலம் என்று சாயை (நிறம்) நான்குவிதம் என ரத்னதத்துவத்தைப் பரீக்ஷித்துப் பார்ப்பவர்கள் கூறுகின்றனர்.

மஞ்சள் நிறமான முத்து செல்வத்தைக் கொடுக்கும்.

மதுர (மனதைக் கவரும் நிறம்) நிறமுள்ள முத்து புத்தியை விருத்தி செய்யும்.

வெண்மை நிறமுள்ள முத்து புகழைக் கொடுக்கும்.

நீல நிறமுள்ள முத்து ஸௌபாக்கியத்தை நாசம் செய்துவிடும்.

माञ्जलिः प्रोच्यते गुञ्जा तास्तिस्रो रूपकं भवेत् ॥ ३३ ॥

रूपकैर्दशभिः प्रोक्तः कलञ्जो नाम नामतः ।

(33–34) ஒரு குன்றிமணி இடைக்கு மாஞ்சலி என்று பெயர்.

மூன்று குன்றிமணி இடைக்கு ரூபகம் = பணவிடை என்று பெயர். பத்துப் பணவிடை கொண்டது ஒரு களஞ்சம் = கழஞ்சு என்று பெயர்.

मानम् —

कांस्यपात्रद्वयं वृत्तं समानं रूपमानतः ॥ ३४ ॥

चतुश्छिद्रसमायुक्तं प्रत्येकं रज्जुयन्त्रितम् ।

दण्डः कांस्यमयः श्लक्ष्णः द्वादशाङ्गुलसम्मितः ॥ ३५ ॥

अंशद्वयसमानश्च प्रान्तयोर्मुद्रिकायुतः ।

मध्ये तस्य प्रकर्तव्यः कण्टकः कांस्यनिर्मितः ॥ ३६ ॥

पञ्चांगुलात्ततस्तस्य मूलछिद्रं प्रकल्पयेत् ।
निवेश्या छिद्रदेशेऽस्य शलाकाऽङ्गुलिमात्रका ॥ ३७ ॥

शलाके प्रान्तयोस्तस्य कीलयेत्तोरणाकृती ।
तोरणस्य शिरोमध्ये कर्तव्या लघुमण्डली ॥ ३८ ॥

तत्र रज्जुं निबध्नीयात् तां दृष्ट्वा तोलयेत्सुधीः ।
कलञ्जमानकं द्रव्यमेकदेशे निवेशयेत् ॥ ३९ ॥

अन्यतो जलबिन्दुं च तोलनार्थं विनिक्षिपेत् ।
कण्टके तु समे जाते तोरणस्य च मध्यगे ॥ ४० ॥

तदा समं विजानीयात् तोलनं नाम कोविदः ।

எடை :—

(34–41) ஸம எடையுள்ள வட்டமான இரண்டு வெண்கலத் தட்டுகளில் நான்கு துவாரங்கள் செய்து அவைகளில் கயிறுகளைக் கட்டவேண்டும்.

கரடு முரடு இல்லாமல் 12 அங்குலம் நீளமுள்ள வெண்கலக் கோலின் நடு மத்தியில் வெண்கலத்தால் முள்வைத்து, அதன் அடியில் துவாரம் செய்து, கைப்பிடியின் இரண்டு பக்கத்திலுமுள்ள தோரணங்களையும் முள்ளின் இரண்டு பக்கங்களிலும் பொருந்தவைத்து இணைக்கவேண்டும். முள்ளின் இரு பக்கங்களிலும் 5 அங்குலம் விட்டு விட்டு துவாரம் செய்து, தராசின் கயிறுகளை அதில் முடியவேண்டும். (அப்பொழுது முள்ளு ஸமமாக நிற்கவேண்டும்). கைப்பிடியில் மேல்பக்கத்தில் கயிற்றைக் கட்டித் தூக்கி முள்ளைப் பார்த்து எடை போடவேண்டும்.

ஒரு தட்டில் எடைபோட்டு மற்றொரு தட்டில் நீர்ச் சொட்டுகளை விட்டு வர, முள்ளு நடுநிலையில் நின்றால் எடை ஸமமாகும்.

चत्वारि त्रीणि युग्मं वा तथैकं वा तुलास्थितम् ॥ ४१ ॥

समं कलञ्जमानेन तत् श्रेष्ठं स्याद्यथोत्तरम् ।
सप्तमात्पञ्चमं यावत् कलञ्जेन समं तु तत् ॥ ४२ ॥

तत्क्रमादुत्तमं ज्ञेयं मौक्तिकं रत्नकोविदैः ।
चतुर्दशात्समारभ्य दशसंख्यावधिक्रमात् ॥ ४३ ॥

कलञ्जस्य समानत्वात् मौक्तिकं मध्यमं स्मृतम् ।

आरभ्य विंशतिं यावत् क्रमात् पञ्चदशावधि ॥ ४४ ॥

लघ्व्यस्ताः कथिता मुक्ताः मौल्यं च तदनुक्रमात् ।
अतः परं च सूक्ष्माणि मौक्तिकानि प्रचक्षते ॥ ४५ ॥

तोलने क्रम एष स्यात् मूल्ये वाऽपि निरूपितः ।
सूक्ष्माणां स्वल्पकं मौल्यं लघूनां लघुमूल्यकम ॥ ४६ ॥

मध्यानां मध्यमं मूल्यं गुरूणां गुरुमूल्यता ।
कलञ्जद्वयमानेन यद्येकं मौक्तिकं भवेत् ॥ ४७ ॥

न धार्यं नरनाथैस्तत् देवयोग्यमनुत्तमम् ।
उत्पत्तिराकाराछाया:(श्च) गुणदोषाः शुभाशुभाः ।
तोलनं मौल्यविन्यासः कथितस्सोमभूभुजा ॥ ४८ ॥

इति मुक्ताः ॥

(41–48) ஒரு கழஞ்சுக்கு 4 முதல் 1 முத்து வரையில் நின்ருல், அந்த முத்துக்கள் "ச்ரேஷ்டம்" - மிகச்சிறந்தவைகள் எனப்படும். அவைகளிலும் அதிக எடை நிற்கும் முத்து மிகச்சிறந்ததாம்.

ஒரு கழஞ்சு எடைக்கு 9 முதல் 5 முத்துக்கள் வரையில் நின்ருல் அவைகள் "உத்தமம்" உயர்தர முத்துக்கள் எனப்படும்.

ஒரு கழஞ்சு எடைக்கு 14 முதல் 10 முத்துக்கள் வரையில் நின்ருல் அவைகள் "மத்யமம்" = நடுத்தர முத்துக்கள் எனப்படும்.

ஒரு கழஞ்சு எடைக்கு 20 முதல் 15 முத்துக்கள் வரையில் நின்ருல் அவைகள் "லகு" = இலகு முத்துக்கள் எனப்படும். இவைகளின் விலை அவைகளின் எடையை யனுஸரித்ததேயாம்.

இவைகளைக் காட்டிலும் சிறிய முத்துக்களும் உண்டு. அவைகளை எடை போடும் முறையும் விலைமதிப்புப் போடும் விதமும் கூறப்பட்டன.

ஸன்ன முத்துக்களுக்கு விலை மிகவும் குறைவு. லகு முத்துக்களுக்கு இலகுவான விலைதான். நடுத்தர முத்துக்களுக்கு நடுத்தர விலைதான். அதிக எடையுள்ள முத்துக்களுக்கு விலை அதிகம்.

ஒரு முத்து இரண்டு கழஞ்சு எடை இருந்தால், அது தேவார்ஹமானது. மிக மிகச்சிறந்தது. அதை அரசனும் தரிக்கலாகாது.

முத்துக்கள் உண்டாகும் இடங்கள், கிடைக்கும் இடங்கள், குணங்கள், தோஷங்கள், நல்ல பலன்கள், எடைபோடுதல், அவைகளின் விலை, இவைகளை இவ்விதம் ஸோம பூபாலன் கூறியிருக்கிறார்.

முத்துக்கள் முற்றும்.

अथ माणिक्यम् ॥

सिन्धौ रावणगङ्गायां सिम्हळे जन्म कीर्तितम् ।
क्षेत्राणि तत्र चत्वारि माणिक्यस्य जगुर्बुधाः ॥ १ ॥

सिम्हळं प्रथमं क्षेत्रं तथा कालापुरं परम् ।
अ (आ) न्ध्रं तृतीयमादिष्टं चतुर्थं तुम्बरं स्मृतम् ॥ २ ॥

(1–2) மாணிக்கமானது ஸிந்து, ராவண கங்கை, சிங்களம் இவைகளில் உண்டாகின்றது.

மாணிக்கம் நான்கு இடங்களில் உண்டாகின்றது என்று அறிவாளிகள் கூறுகின்றனர்.

அவைகளில் சிங்களம் முதலாவது இடம். காலாபுரம் இரண்டாவது இடம். அ (ஆ) ந்திரம் மூன்றாவது இடம். தும்பரம் நான்காவது இடமாம்.

अशोकपल्लवच्छायं अ (आ) न्ध्रे सौगन्धिकं विदुः ।
तुम्बुरू (रं) छायया नीलं नीलगन्धि प्रकीर्तितम् ॥ ३ ॥

सिम्हळे तु भवेद्रक्तं पद्मरागमनुत्तमम् ।
पीतं कालापुरोद्भूतं कुरुविन्दमिति स्मृतम् ॥ ४ ॥

उत्तमं सिम्हळोद्भूतं निकृष्टं तुम्बुरोद्भवम् ।
मध्ययोर्मध्यमं ज्ञेयं माणिक्यं क्षेत्रभेदतः ॥ ५ ॥

(3–5) அ (ஆ) ந்திர தேசத்தில் உண்டாகும் மாணிக்கம் அசோகத்தளிர் நிறமுள்ளது. இதற்கு "ஸௌகந்திகம்" என்று பெயர்.

தும்புரத்தில் உண்டாவது நீலநிறமுள்ளதாம். இதற்கு "நீலகந்தி" என்று பெயர்.

சிங்களத்தில் உண்டாவது சிகப்பு நிறமாக இருக்கும். இதற்கு "பத்மராகம்" என்று பெயர்.

காலாபுரத்தில் உண்டாவது மஞ்சள் நிறமாக இருக்கும். இதற்கு "குருவிந்தம்" என்று பெயர்.

இவைகளில் சிங்களத்தில் உண்டாவது சிறந்தது. தும்புரத்தில் உண்டாவது கடைத்தரமானது. மற்ற இரு இடங்களிலும் உண்டாவது நடுத்தரமானது. இவைகள் இடங்களின் வேற்றுமையாலுண்டாகும் குணபேதங்களாம்.

माणिक्यस्य समाख्याता अष्टौ भेदा मुनीश्वरैः ।
गुणाश्चत्वार आख्याताः छायाः षोडश कीर्तिताः ॥ ६ ॥

छायाद्वितयसंबद्धं द्विछायं बन्धुनाशनम् ।
द्विरूपं द्विपदं तेन मासैकन पराभवः ॥ ७ ॥

संभेदं भिन्नमित्युक्तं शस्त्रघातविधायकम् ।
कर्करं शर्करायुक्तं पशुबन्धुविनाशनम् ॥ ८ ॥

दुग्धलिप्तसमं यत्तु लशुनापदमुच्यते ।
अशोभनं तदुद्दिष्टं माणिक्यं मणिकोविदैः ॥ ९ ॥

मधुबिन्दुसमच्छायं कामलं परिकीर्तितम् ।
आयुर्लक्ष्मीं जयं हन्ति सदोषं तन्न धारयेत् ॥ १० ॥

रागहीनं जडं प्रोक्तं धनधान्यापवादकृत् ।
धूम्रं धूम्र (म) समाकारं वैद्युतं भयमावहेत् ॥ ११ ॥

ईदृग्दोषयुता निन्द्याः मणयो मूल्यवर्जिताः ।
अपि प्राप्य न ते धार्याः गृहे शोभनमिच्छता ॥ १२ ॥

माणिक्यस्य गुणाः प्रोक्ताः चत्वारो मुनिपुङ्गवाः ।
स्निग्धच्छाया गुरुत्वं च नैर्मल्यमतिरक्तता ॥ १३ ॥

इति माणिक्यम् ॥

(6–13) மாணிக்கம் எட்டு விதமென்று முனிவர்கள் கூறுகின்றனர். அவைகளில் நல்ல குணங்கள் நான்கு. சாயை = நிறம் பதினாறு விதமாம்.

இரண்டு விதமான நிறம் கலந்திருந்தால் அதற்கு 'துவிச் சாயம்'=இரண்டு வித நிறம் கலந்தது என்று பெயர். இந்த தோஷம் பந்துக்களை வதைக்கும்.

ஒரேகல்லில் இரண்டு உருவம் காணப்பட்டால் அதற்கு "துவி பதம்" என்று பெயர். இந்த தோஷம் ஒரு மாதகாலத்திற்குள் அவமானத்தை உண்டுபண்ணும்.

உடைந்திருந்தால் அதற்கு "பின்னம்" என்று பெயர். இந்த தோஷம் ஆயுதங்களால் தாக்குறச் செய்யும்.

மணல் கலந்திருந்தால் அதற்கு 'கர்கரம்' என்று பெயர். இந்த தோஷம் பசுக்களேயும், சுற்றத்தாரையும் அழித்துவிடும்.

கல்லில் பால் படிந்ததுபோல் காணப்பட்டால் அதற்கு "லசுநா பதம்" என்று பெயர். இந்த தோஷம் அமங்களகரமென்று ரத்ன பரீக்ஷை தெரிந்தவர்கள் கூறுகின்றனர்.

தேன் பொட்டின் நிறமுடையதற்கு "காமலம்' என்று பெயர். இந்த தோஷம், ஆயுள்–செல்வம்–ஜயம் இவைகளை ஒழித்துவிடும். ஆகவே இதை தரிக்கலாகாது.

சிகப்பு நிறமாக இல்லாததற்கு "ஜடம்" என்று பெயர். இது தனம் தானியங்களை நாசம் செய்து விடும்.

புகை நிறமாக இருப்பதற்கு ' தூம்ரம்" என்று பெயர். இந்த தோஷம் இடியினுல் பயத்தை யுண்டுபண்ணும்.

இத்தகைய (எட்டுவித) தோஷமுள்ள மாணிக்கங்கள் நிந்திக்கத்தக்கவைகளாம். இவைகளுக்கு விலேயே கிடையாது.

இந்த தோஷமுள்ளவைகள் ஒரு சமயம் கையில் கிடைத்தாலும், வீட்டில் சுபசோபனங்களை விரும்புகிறவன் அதைத் தரிக்கலாகாது.

ஒ முனிவர்களே! மனதைக்கவரும் பளபளப்பு = (ஒளி), கனமாக இருத்தல், மங்கலாக இல்லாமை, நல்ல சிகப்பு நிறம், ஆகிய நான்கு குணங்கள் கூறப்பட்டிருக்கின்றன.

மாணிக்கம் முற்றும்.

अथ पद्मरागः ॥

सर्वलक्षणसंपन्ने पद्मरागे गृहे स्थिते ।
अश्वमेधफलं तस्य वित्तमायुर्धनं भवेत् ॥ १ ॥

छाया या पद्मरागस्य रक्ता कोकनदप्रभा ।
छायास्तु कुरुविन्दस्य चत्वारः परिकीर्तिताः ॥ २ ॥

अच्छक्षीरसमभा (समाभासा) कुङ्कुमोदकसन्निभा ।
ईषद्रक्ता भवेच्छाया सौगन्धिकमणेरियम् ॥ ३ ॥

नीलोत्पलदलप्रख्या लोहाग्निविट्सप्रभा ।
नीलगन्धमणौ प्रोक्ते छाये द्वे मणिकोविदैः ॥ ४ ॥

(1–4) ஸகல லக்ஷணங்களுடன் கூடிய பத்மராக மணி வீட்டிலிருந்தால், அசுவமேதம் செய்த பயன், செல்வம், ஆயுள் இவைகள் உண்டாகும்.

சிகப்பும் செந்தாமரையின் நிறமும் பத்மராகத்தின் நிறங்களாம்.

வெளுப்பு, பாலின் நிறம், குங்கும ஜலத்தின் நிறம், சிறிது சிவப்பான நிறம், இந்நான்கும் குருவிந்த மணியின் நிறங்களாம்.

சிறிது சிவப்பான மணிக்கு "ஸௌகந்திகம்" என்று பெயர்.

நீலோத்பலத்தின் இதழ் போன்ற நிறம், லோஹாக்னிவிட்=கிட்டான் நிறம் (லோஹாக்கினிவிட் என்பது – இரும்பைக் காய்ச்சும்பொழுது இரும்பின் பாகங்கள் உலையில் விழுந்து அது கட்டியாக ஆகும். இதற்கு லோஹாக்கினிவிட் என்று பெயர். இதற்கு கிட்டான் என்றும் பெயர்) இவ்விரண்டுவித நிறங்களையும் உடைய மணிக்கு நீல கந்தி மணி என்று பெயர்.

इन्द्रनीलस्य संभूतिः सिम्हळद्वीपमध्यतः ।
नद्या रावणगङ्गायाः कूले पद्मा कुरे (क) कुरौ ॥ ५ ॥

सितच्छाया भवेद्विप्रः ताम्रः क्षत्रियजातिकः ।
पीतस्तु वैश्यजातीयः वृषळः कृष्णदीधितिः ॥ ६ ॥

दोषांश्चास्य प्रवक्ष्यामि नामभिर्लक्षणैश्च षट् ।
गुणांश्च कथयिष्यामि पञ्चधाऽष्टविधा छविः ॥ ७ ॥

अभ्रवत् पटलं यस्य तदभ्रकमितिस्मृतम ।
धारणे तस्य संपत्तिः आयुश्चैव विनश्यति ॥ ८ ॥

शर्करामिश्रितं यत्तु तत् ज्ञेयं तु सशर्करम् ।
तस्मिन् धृते दरिद्रत्वं देशत्यागश्च जायते ॥ ९ ॥

भेदसंशयकृत् त्रासः तेन दंष्ट्रिभयं भवेत् ।
भिन्नं भिन्नमिति ख्यातं भार्यापुत्रविनाशनम् ॥ १० ॥

मृत्तिका यस्य गर्भस्था दृश्यते रत्नकोविदैः ।
मृत्तिकागर्भकं नाम त्वग्दोषजननं भवेत् ॥ ११ ॥

दृषत् प्रलक्ष्यते यस्य गर्भे नीलस्य कोविदैः ।
अश्मगर्भं तदाख्यातं तद्धर्ता परिभूयते ॥ १२ ॥

(5–12) சிங்களத் தீவின் மத்திய பாகம், ராவண கங்கா நதிக்கரை, பத்மா கரம், குரு க்ஷேத்திரம், இந்த இடங்களில் நீலமணி உண்டாகின்றது.

இதில் வெளிர் நிறமானது பிராமண ஜாதியாம். சிகப்பு நிறமானது க்ஷத்திரிய ஜாதியாம். மஞ்சள் நிறமானது வைசிய ஜாதியாம். கருப்பு நிற மானது சூத்ர ஜாதியாம்.

நீலத்தில் ஆறுவித தோஷங்களுண்டு. அவைகளின் பெயர்களையும், அவை களின் இலக்கணங்களையும் கூறுகிறேன். ஐந்துவித குணங்களும், எட்டுவித நிறங்களும் உண்டு. அவைகளையும் கூறுகிறேன்.

நீலக்கல்லின் மேலே அப்ரகத்தைப்போல் படர்ந்திருக்கும். இந்த தோஷத்திற்கு "அப்ரகம்" என்று பெயர். இதைத் தரித்துக்கொண்டால் ஐசுவரியமும், ஆயுளும் அழிந்து விடும்.

கல்லில் மணல் சேர்ந்திருக்கும். இதற்கு "ஸ்சர்கரம்" என்று பெயர். இதைத் தரித்தால் தாரித்திரியம் உண்டாகும். தேசத்தை விட்டு ஓடும்படி நேரிடும்.

பொறிசல் முதலியவைகளிருந்தால், உடைந்திருப்பதுபோன்ற ஸந்தே கத்தை யுண்டுபண்ணும். இந்த தோஷத்திற்கு "த்ராஸம்" என்று பெயர். அதைத் தரித்துக் கொண்டால் பல்லில் விஷமுள்ள ஸர்பாதிகளால் பய முண்டாகும்.

உடைந்திருந்தால் அதற்கு "பின்னம்" என்று பெயர். அதைத் தரித் தால் மனைவி மக்களை இழப்பான்.

கல்லின் மத்தியில் (உட்புறத்தில்) மண்ணிருக்கும். இதற்கு "மிருத்திகா கர்பம்" என்று பெயர். இது சர்ம தோஷத்தை உண்டு பண்ணும்.

நீலத்தினுள் கல் காணப்படும். இதற்கு "அச்ம கர்பம்" என்று பெயர் இதைத் தரிப்பவன் அவமதிக்கப்படுவான்.

இவைகள் நீலமணியின் தோஷங்களாம்.

गुरुत्वं स्निग्धकान्तित्वं सुरङ्गः पार्श्वरञ्जनम् ।
तृणग्राहित्वमित्येते गुणाः पञ्च प्रकीर्तिताः ॥ १३ ॥

(13) கனம், மனதைக் கவரும் காந்தி, நல்ல பூரிப்பு, பக்கங்களில் பூரிப்பு, புல்லைப் பிடிக்கும் தன்மை என்ற இவ்வைந்தும் நீலமணியின் குணங்களாம்.

नीलरत्नसमाभासा वैणवी पुष्पसन्निभा ।
अतसीपुष्पसंकाशा चाषपक्षसमद्युतिः ॥ १४ ॥

कृष्णाद्रिकर्णिकापुष्पसमानद्युतिधारिणी ।
मयूरकण्ठसच्छाया शंभोः कण्ठनिभा तथा ॥ १५ ॥

विष्णुदेहसमाभासा भृङ्गपक्षसमप्रभा ।
दोषैस्त्यक्तो गुणैर्युक्तः इन्द्रनीलो महामणिः ॥ १६ ॥

यस्य देहे भवेत्तस्य वित्तमायुर्बलं यशः ।

(14–17) விஷ்ணுக் கிராந்திப்பூ, காசாம்பூ, ஸுவர்ண சாதகம் அல்லது நீல நிறப்பக்ஷி, கிருஷ்ணுத்திரியிலுள்ள கர்ணிகா (கர்ணிகாரம்?) புஷ்பம், மயிலின் கழுத்து, நீலகண்டரின் கழுத்து, மஹா விஷ்ணுவின் உடல், வண்டின் இறகு, இவைகளைப் போன்ற நிறங்கள் நீலமணியின் நிறங்களாம்.

தோஷங்களில்லாத குணங்களுள்ள நீல ரத்னத்தை சரீரத்தில் தரிப்பவனுக்கு செல்வம்–ஆயுள்–பலம்–புகழ் இவைகள் உண்டாகும்.

क्षीरमध्ये क्षिपेन्नीलं क्षीरं तन्नीलतां व्रजेत् ॥ १७ ॥

इन्द्रनीलस्स विज्ञेयः रविनन्दनवल्लभः ।
इन्द्रनीले धृते सौरिः प्रसन्नः सततं भवेत् ।
आयुश्च महतीं लक्ष्मीं आरोग्यं च प्रयच्छति ॥ १८ ॥

इति इन्द्रनीलः ॥

(17–18) நீலமணியை பாலில் போட்டால் அந்தப்பால் முழுமையும் நீல நிறமாகக் காணப்படும். அப்படிக் காணப்பட்டால் அந்த நீலத்திற்கு "இந்திர நீலம்" என்று பெயர். இது சனி பகவானின் ரத்னமாகும். இந்த இந்திர நீல மணியை தரித்துக் கொண்டால் சனி பகவான் எப்பொழுதும் கருணையுள்ளவராவார். ஆயுள், அளவற்ற செல்வம், ஆரோக்கியம் இவைகளைக் கொடுப்பார்.

இந்திர நீலம் முற்றும்.

॥ अथ मरकतम् ॥

तुरुष्कविषयेऽम्भोधेस्समीपे विषमस्थले ।
भवेन्मरकतं रत्नं गुणो दोषोऽस्य कथ्यते ॥ १ ॥

दोषास्सप्त भवन्त्यस्य गुणाः पञ्चविधाः स्मृताः ।
भवेदष्टविधा छाया मणेर्मरकतस्य हि ॥ २ ॥

(1–2) துருஷ்க தேசத்தில் ஸமுத்திரத்திற்கு ஸமீபத்தில் மேடுபள்ளமான இடத்தில் மரகதம் உண்டாகின்றது.

மரகதத்தின் தோஷங்கள் ஏழு. குணங்கள் ஐந்து. நிறம் எட்டு விதம் என்று கூறப்பட்டிருக்கிறது.

अस्निग्धं रूक्षमित्युक्तं व्याधिस्तस्मिन्धृते भवेत् ।
विस्फोटं स्यात्सपिटकं तस्मिन्शस्त्रहतिर्धृते ॥ ३ ॥

सपाषाणे भवेद्बन्धुनाशो मरतके धृते ।
विच्छायं मलिनं प्राहुः बाधिर्यं तेन जायते ॥ ४ ॥

शर्करं शर्करायुक्तं पुत्रशोकप्रदं ध्रुवम् ।
जरठं कान्तिहीनं स्यात् दंष्ट्रिवह्निभयं भवेत् ॥ ५ ॥

कल्माषं वर्णशबलं ततो मृत्युभयं भवेत् ।
इति दोषास्समाख्याताः वर्ण्यन्तेऽतः परं गुणाः ॥ ६ ॥

(3–6) நைப்பு அதாவது பளபளப்பு இல்லாததற்கு "ரூக்ஷம்" என்று பெயர். அதை தரித்தால் வியாதியுண்டாகும்.

மரகதத்தினுள் கொப்பளம் காணப்பட்டால் அதற்கு "விஸ்போடம்" என்று பெயர். அதைத் தரித்தால் ஆயுதங்களால் தாக்கப்படுவான்.

நீலத்தில் கல் சேர்ந்து இருந்தால் பந்துக்கள் நசிப்பார்கள். இதற்கு "ஸபாஷாணம்" என்று பெயர்.

ஒளி இல்லாமலிருந்தால் அதற்கு "மலினம்" என்று பெயர். அதை அணிந்து கொண்டால் காது செவிடாகும்.

மணல் கலந்திருந்தால் அதற்கு "சர்கரம்" என்று பெயர். இது நிச்சயமாக புத்திர சோகத்தைக் கொடுக்கும்.

ஒளி மங்கிப்போனதாக இருந்தால் அதற்கு "ஜரடம்" என்று பெயர். பல்லில் விஷமுள்ளவைகளாலும் தீயினாலும் பயமுண்டாகும்.

ஒளியில் மஞ்சள் நிறம் கலந்திருந்தால் அதற்கு 'கல்மாஷம்" (கல்மாஷம் = விஷம்) என்று பெயர். அதனால் மரண பயமுண்டாகும்.

இவ்விதம் ஏழு தோஷங்களும் கூறப்பட்டன. இனி குணங்களைக் கூறுகிறேன்.

निर्मलं कथितं स्वच्छं गुरु स्याद्गुरुतायुतम् ।
स्निग्धं रौक्षविनिर्मुक्तमरजस्कमरेणुकम् ॥ ७ ॥

सुरागं रागबहुलं इति पञ्च गुणाः स्मृताः ।
एतैर्युक्तं मरकतं सर्वपापभयापहम् ॥ ८ ॥

(7-8) நல்ல ஒளியுள்ள ரத்னத்திற்கு "ஸ்வச்சம்" என்று பெயர். கனமுள்ளதற்கு "குரு" என்று பெயர். பளபளப்பு உள்ளதற்கு "ஸ்நிக்தம்" என்று பெயர். மணல் முதலியவைகளில்லாததற்கு "அரஜஸ்கம்" என்று பெயர். சிறந்த ஒளியுள்ளதற்கு "ஸுராகம்" என்று பெயர். இவ்வைந்தும் மரகதத்தின் குணங்களாம். இந்த குணங்களுடன் கூடிய மரகதத்தை அணிந்துகொண்டால் ஸகல பாபங்களும் தீரும். எல்லாவித ரோகங்களும் தீரும்.

बर्हिपिञ्छसमाभासा चाषपक्षसमापरा ।
अहिकाचनिभा चान्या तथा शैबलसन्निभा ॥ ९ ॥

खद्योतपृष्ठसंकाशा बालकीरगरुत्समा ।
नवशाद्वलसच्छाया शिरीषकुसुमोपमा ॥ १० ॥

एवमष्टौ समाख्याताः छाया मरकताश्रयाः ।
छायाभिर्युक्तमेताभिः श्रेष्ठं मरतकं स्मृतम् ॥ ११ ॥

शैवालवल्लरीच्छायं सुरङ्गत्रासवर्जितम् ।
अनर्घ्यं तन्मरकतं प्राहुस्सर्वविषापहम् ॥ १२ ॥

इति मरकतम् ॥

(9-12) மயிலின் தோகை-நீலநிறப்பக்ஷி-அஹிகாசம் (அஹிகாசம்-சிக்கிமுக்கிக்கல் அல்லது விஷக்கல்) பாசிக்கொத்து-மின்மினிப்பூச்சியின் பின்பக்கம்-பச்சைக்கிளிக்குஞ்சின் சிறகு, புதிய பசும் புல், வாகைப்பூ, இவ்வெட்டு வஸ்துக்களின் நிறம்போன்ற எட்டுவித நிறங்கள் மரகதங்களுக்குக் கூறப்பட்டிருக்கின்றன. இந்த எட்டுவித நிறமுள்ள மரகதங்கள் மிகச் சிறந்தவைகளாம்.

பாசிக்கொத்தின் நிறமுள்ளதாயும், ஓட்டை, கொப்பளம் முதலிய தோஷமற்றதுமான மரகதமானது விலை மதிக்க முடியாதது என்றும் ஸகல விஷங்களையும் போக்கி விடுமென்றும் கூறப்பட்டிருக்கிறது.

மரகதம் முற்றிற்று.

॥ अथ स्फटिकः ॥

हिमालये सिम्हले च विन्ध्ये तापीतटे तथा ।
स्फटिकं जायते रत्नं नानारूपं मनोहरम् ॥ १ ॥

हिमाद्रौ चन्द्रसंकाशं स्थूलं कान्तियुतं भवेत् ।
सूर्यकान्तं च तत्रैकं चन्द्रकान्तं तथाऽपरम ॥ २ ॥

सूर्यांशुस्पर्शमात्रेण वह्निं धमति तत्क्षणात् ।
सूर्यकान्तं तदाख्यातं स्फाटिकं रत्नवेदिभिः ॥ ३ ॥

पूर्णेन्दुकरसंस्पर्शादमृतं क्षरति क्षणात् ।
चन्द्रकान्तं तदाख्यातं दुर्लभं स्यात्कलौ युगे ॥ ४ ॥

अशोकपल्लवच्छायं दाडिमीवीजसप्रभम् ।
विन्ध्यतापीतटोद्देशे जायते मन्दकान्तिकम् ॥ ५ ॥

सिम्हले जायते कृष्णमाकरे नीलगन्धिके ।
पद्मरागभवस्थाने विविधं स्फाटिकं भवेत् ॥ ६ ॥

इति स्फाटिकः ॥

ஸ்படிகம்.

(1–6) இமயமலை, சிங்களம், விந்தியமலை, தாபீநதி இந்த இடங்களில் பற்பல விதமான மனோஹரமான ஸ்படிக ரத்னங்கள் உண்டாகின்றன.

இமயமலையில் உண்டானது சந்திரனைப் போன்ற பிரகாசமுள்ளதாம். பெரியதாக இருக்கும். மனோஹரமாகவும் இருக்கும்.

ஸ்படிகத்தில் ஒரு வகைக்கு ஸூரியகாந்தமென்றும் மற்றொரு வகைக்கு சந்திரகாந்தம் என்றும் பெயர். ஸூரிய காந்தம் ஸூரிய கிரணம் பட்டவுடன் நெருப்பைக் கக்கும். சந்திரகாந்தம் என்பது பூரண சந்திர கிரணம் பட்டவுடன் ஜலத்தைப் பெருக்கும். இவ்விரண்டும் கலியுகத்தில் கிடைப்பதரிது.

அசோக பல்லவம், மாதுளைமுத்து, இவைகளைப் போன்ற நிறமுள்ள ஸ்படிகமானது விந்தியம் தாபீ நதிக்கரையில் உண்டாகிறது. இது சிறிது ஒளி குறைந்திருக்கும்.

நீல நிறமான ஸ்படிகம், சிங்களத்தில் நீலகந்தி கிடைக்கும் ஆகரத்தில் கிடைக்கிறது.

பத்மராகம் கிடைக்குமிடத்தில் பற்பல விதமான ஸ்படிகங்கள் உண்டாகின்றன.

ஸ்படிகம் முற்றும்.

॥ अथ पुष्परागः ॥

ईषत्पीतं पविच्छायं स्वच्छं कल्पमनोहरम् ।
पुष्परागमिति ख्यातं रत्नं रत्नपरीक्षकैः ॥ १ ॥

इति पुष्परागम् ॥

புஷ்பராகம்.

(1) வைரத்தைப் போன்று சிறிது மஞ்சள் நிறம் கலந்த வெண்மையாக இருக்கும். சிறிதளவு மனதைக்கவரும். இதற்கு "புஷ்பராகம்" என்று பெயர் என்று ரத்ன பரீக்ஷை அறிந்தவர்கள் கூறுகின்றனர்.

புஷ்பராகம் முற்றும்.

अथ वैडूर्यम् ॥

सिताभ्रधूमसंकाशं ईषत्कृष्णसितं तु यत् ।
वैडूर्यं नाम तत्प्रोक्तं रत्नवर्णपरीक्षकैः ॥ १ ॥

வைடூர்யம்.

(*1*) வெண்மேகம், புகைப்போன்று சிறிது கருநிறம் கலந்த வெண்ணிறமான ஸ்படிகத்திற்கு "வைடூரியம்" என்று பெயர், என்று ரத்னங்களின் நிறங்களை அறிந்தவர்கள் கூறுகின்றனர்.

வைடூரியம் முற்றும்.

अथ गोमेदकम् ॥

मधुबिन्दुसमं वापि गोमूत्रौघसमप्रभम् ।
गोमेदकं तदाख्यातं रत्नं सोममहीभुजा ॥ १ ॥

கோமேதகம்.

(1) தேன் பொட்டின் நிறமாகவோ கோமூத்திர தாரையின் நிறமாகவோ இருந்தால், அந்த ஸ்படிகத்திற்கு "கோமேதகம்" என்று பெயர் என்று ஸோம பூபாலன் கூறியுள்ளார்.

கோமேதகம் முற்றும்.

अथ प्रवालम् ॥

सेतौ सागरमध्ये तु जायते वल्लरीयुता ।
विद्रुमाख्या सुरप्रोक्ता दुर्लभा रत्नरूपिणी ॥ १ ॥

पाषाणत्वं भजत्येषा प्रयत्नात्कथिता सती ।
प्रवालं नाम तद्रक्तं वर्णाढ्यं मन्दकान्तिकम् ॥ २ ॥

பவழம்.

(1–2) ராமஸேதுவில் ஸமுத்திரத்தில் பவழமானது கொடியுடன் உண்டாகிறது. இதைத் தான் தேவர்கள் சிறந்த பவழமெனக் கூறுகின்றனர். இது தான் ரத்னமாகக் கூறப்படுகிறது. இது கிடைப்பது துர்லபம்.

இதை முயற்சியுடன் கொதிக்க வைத்தால் இது கல்லாக மாறுகிறது. இதற்கு பவழம் என்று பெயர். இது சிகப்பு நிறமாக இருக்கும். உறைகல்லில் உறைத்தால் வர்ணம் காட்டும். மங்கல் நிறமாக இருக்கும்.

பவழம் முற்றும்.

पद्मरागस्य नीलस्य ये दोषाः परिकीर्तिताः ।
तैरेव दूषितं रत्नं सन्त्याज्यं स्फटिकं नृपैः ॥ १ ॥

गौरवं स्वच्छता कान्तिः काठिन्यं रत्नजा गुणाः ।
विहाय वज्रं नान्येषु लाघवं शोभनं भवेत् ॥ २ ॥

(1–2) பத்மராகம் நீலம் இவைகளுக்குக் கூறிய தோஷங்களே ஸ்படிகத்திற்கும் கூறப்பட்ட தோஷங்களாம். அத்தகைய தோஷமுள்ள ஸ்படிகங்களை அரசர்கள் விலக்கிவிட வேண்டும்.

பளுவுள்ளதாக இருத்தல், சுத்தமாக இருத்தல், ஒளியுள்ளதாக இருத்தல் அழுத்தமாக இருத்தல், இவைகள் ரத்னங்களின் குணங்களாம். வைரம் நீங்கலாக மற்ற ரத்னங்கள் லேசாக (கனமில்லாமல்) இருந்தால் அது சுபபலனைக் கொடுக்காது. அல்லது அது நல்லதன்று.

अथ कृत्रिमरत्नज्ञानम् ॥

रत्नानां रूपसाम्यं हि धूर्ताः कुर्वन्ति युक्तितः ।
तेषां परीक्षां वक्ष्यामि रत्नारत्नविचारिणीम् ॥ १ ॥

वज्रेण वेधयेद्वज्रं कृत्रिमं चेद्विभज्यते ।
कृत्रिमं मौक्तिकं नश्येत् क्षालितं लवणाम्भसा ॥

माणिक्यादीनि रत्नानि घर्षणात्क्वथनादपि ।
शोधयेद्रत्नवित्प्राज्ञः विज्ञानार्थं तु कृत्रिमे ॥ ३ ॥

त्यजति क्वथितं रागं कृत्रिमं तद्विदुर्बुधाः ।
मार्दवं दृश्यते पृष्ठे ज्ञेयं तत् कृत्रिमं बुधैः ॥ ४ ॥

एवं विचार्य रत्नानि कोशे संचिनुयान्नृपः ।
आयुर्लक्ष्मीं जयं कीर्तिं प्रयच्छन्ति निरन्तरम् ॥ ५ ॥

माणिक्यं वज्रवैडूर्यं गोमेदं पुष्परागकम् ।
नीलं मुक्ताप्रवालं च रत्नं मरकतं नव ॥ ६ ॥

போலி ரத்னங்களை அறிதல்.

(1–6) அயோக்கியர்கள் யுக்தியினல் ரத்னங்களைப் போன்ற போலி ரத்னங்களைச் செய்து விடுகிருர்கள். ஆகையால் உண்மையான ரத்னமா அல்லது போலி ரத்னமா என்பதைத் தெரிந்து கொள்ளுவதற்கு செய்யவேண்டிய பரீக்ஷை முறைகளைக் கூறுகிறேன்.

வஜ்ரத்தை வஜ்ரத்தால் துவாரம் போடவேண்டும். போலி வைரமாஞல் அது சிதைந்து விடும்.

உப்பு ஜலத்தில் முத்தை அலம்பவேண்டும். அது போலி முத்தாஞல் உருக்குலைந்துவிடும்.

மாணிக்கம் முதலிய ரத்தினங்களை தேய்த்தும், கொதிக்கவைத்தும் பரீக்ஷிக்கவேண்டும். கொதிக்க வைத்தால் போலி ரத்னம் நிறம் குன்றும். அதை போலி என்று அறியவேண்டும்.

ரத்னத்தின் பின் பக்கம் மிருதுவாக இருந்தால் அது போலி ரத்னமாகும்.

இவ்விதம் ரத்னங்களை பரீக்ஷித்துப் பார்த்து சுத்தமான ரத்னங்களைப் பொறுக்கி எடுத்து நல்ல ரத்னங்களை சேகரித்து பொக்கிஷத்தில் வைத்துக் காப்பாற்ற வேண்டும். இந்த ரத்னங்கள் ஆயுள், தனம், ஜயம், கீர்த்தி இவைகளை என்றும் கொடுக்கும்.

மாணிக்கம், வஜ்ரம், வைடூர்யம், கோமேதகம், புஷ்பராகம், நீலம், முத்து, பவழம், மரகதம் என்பன ஒன்பது ரத்னங்களாம்.

போலி ரத்ன பரீக்ஷை முற்றும்.

॥ नवरत्नमुद्रिकानिर्माणप्रकारः ॥

मध्ये भानोस्सुमाणिक्यं पूर्वे वज्रं च भार्गवे ।
चन्द्रे मुक्ताऽनलदिशि कुजे याम्ये प्रवाळकम् ॥ १ ॥

नैर्ऋत्ये राहोर्गोमेदं नीलं तु पश्चिमे शनेः ।
वायव्ये गुरोः पुष्पाख्यं केतोर्वैडूर्यमुत्तरे ॥ २ ॥

ईशान्ये ज्ञो मरकतं एवं स्याद्ग्रहमुद्रिका ॥ ३ ॥

इति मुद्रिकाप्रकारः ॥

நவரத்ன மோதிரம் செய்யும்முறை.

(1–3) மத்திய பாகத்தில் சூரியனுக்கும், கிழக்கில் சுக்கிரனுக்கும், அக்னி திக்கில் சந்திரனுக்கும், தெற்கில் குஜனுக்கும், தென் மேற்கில் ராகுவுக்கும், மேற்கில் சனிக்கும், வாயு திக்கில் குருவுக்கும், வடக்கில் கேதுவுக்கும், ஈசானியத்தில் புதனுக்கும் இடங்கள் கூறப்பட்டிருக்கின்றன.

இவ்விதமே ஸூரியனுக்கு மாணிக்கமும், சுக்கிரனுக்கு வஜ்ரமும், சந்திரனுக்கு முத்தும், செவ்வாய்க்கு பவழமும், ராஹுவுக்குக் கோமேதகமும், சனிக்கு நீலமும், குருவுக்குப் புஷ்பராகமும், கேதுவுக்கு வைடூரியமும் புதனுக்கு மரகதமும், ரத்னங்களாகக் கூறப்பட்டிருக்கின்றன.

எனவே சூரியனுடைய ரத்னமான மாணிக்கத்தை நடுவில் வைத்து, வஜ்ரம், முத்து, பவழம், கோமேதகம், நீலம், புஷ்பராகம், வைடூர்யம், மரகதம் இவைகளை முறையே கிழக்கு திக்கு முதல் ஈசானிய திக்கு வரையில், வஜ்ரம் முதல் மரகதம் ஈரான எட்டு ரத்னங்களையும் வைத்து மோதிரத்தில் இழைக்க வேண்டும். இதற்கு நவரத்ன மோதிரம் என்று பெயர்.

நவரத்ன மோதிரம் முற்றும்.

॥ अथ कृत्रिमरत्ननिर्माणप्रकारः ॥

दग्धशङ्खं ससिन्दूरं समांशं चूर्णयेत्ततः ।
क्षीरैः सद्यः प्रसूतायाः इलायां मर्दयेद्दृढम् ॥ १ ॥

पूरयेत्तं तृणप्रोतं नाळे वंशादिसंभवे ।
सुपक्वे चान्नभाण्डे तु यवागूसहिते क्षिपेत् ॥ २ ॥

आच्छाद्य पश्चान्मन्दाग्नौ घटे तैलं समुत्क्षिपेत् ।
प्रवाळ(ळं)नाळिकागर्भे जायते पद्मरागवत् ॥ ३ ॥

पाचिता निकषाक्वाथे द्वियामं मन्दवह्निना ।
स्निग्धां सु(मु)कुटकोपेतां कान्तिं याति प्रवाळकम् ॥ ४ ॥

போலி ரத்னம் செய்யும் முறை.

(1–4) சுட்ட சங்கும் ஸிந்தூரமும் ஸம எடை எடுத்துப் பொடிபண்ணி பிறகு அதை அப்பொழுது ஈன்ற மாட்டின்பாலை விட்டு பூமியில் நன்கு மர்திக்க வேண்டும். அதை (உருவாகச் செய்து) புல்லில் கோர்த்து மூங்கில் குழாய் முதலியவைகளில் நிரப்பி வைத்துக் கொள்ளவேண்டும். பிறகு பாண்டத்தில் அரிசியை உலைவைத்து அது நன்ருக வெந்து அன்னமாக ஆனபின்பு கஞ்சியுடன் கூடிய அந்த அன்ன பாண்டத்தில் முன் தயாராக வைத்திருக்கும் குழாயை வைத்து அந்தப் பாண்டத்தில் எண்ணையை விட்டு மூடி, பின் மந்தாக்கினியில் எறிக்கவேண்டும். அந்தக் குழாயில் வைத்தவைகள் பவழமாகும். அது பதும ராகத்தைப் போலிருக்கும்.

பிறகு அதை நிகஷா ....? கஷாயத்தில் மந்தாக்கினியில் இரண்டு யாமம் எறித்தால் மனோஹரமான நல்ல ஒளியுள்ள பவழமாகும்.

॥ अथ इन्द्रनीलः ॥

नीलीचूर्णं पलैकं तु पूर्वकूप्यां तु यद्द्रवम् ।
तद्द्रवं द्विपलं चूर्णं क्षिप्त्वा सर्वं विलोडयेत् ॥ ५ ॥

...शीतत्वेन पूर्ववह्निना पचेत् ।
इन्द्रनीलानि तान्येव जायन्ते नात्र संशयः ॥ ६ ॥

(5–6) இந்திர நீலம் சரியாக இல்லை.

॥ अथ मरकतम् ॥

मञ्जिष्ठं तिलकं नीलीं सम(मं) चूर्णं प्रकल्पयेत् ।
काचकूप्यां स्थितं द्रव्य(व्यं) सर्वमेव तु लोडयेत् ॥ ७ ॥

वर्षोपलान्यनेनैव सिक्त्वा पश्चाच्च वह्निना ? ।
सर्वे मरकतास्तेन समीचीना भवन्ति हि ॥ ८ ॥

மாகதம்.

(7–8) மஞ்சிடை, கருப்புநிற ஸௌவர்சலம், அவுரி இவைகளை சம பாகம் தூள் செய்து அதை கண்ணுடிக் கிண்ணத்தில் போட்டுக் கலந்து, வர்ஷோபலங்களை (ஆலங்கட்டிகளை) அதனுள் பொதிந்து நெருப்பில் வைத்து எரிக்க அவைகள் நல்ல மரகதங்களாகும்.

(இதிலும் மூலம் சம்பூர்ணமாக இல்லை)

॥ अथ पद्मरागम् ॥

दग्धशङ्खं सदरदं समचूर्णं प्रकल्पयेत् ।
काचकुप्यां स्थितं द्रव्ये सर्वमेव तु लोडयेत् ॥ ९ ॥

वर्षोपलान्यनेनैव सिक्त्वा पश्चाच्च वह्निना ।
पद्मरागा भवन्त्येव समीचीना न संशयः ॥ १० ॥

इति श्रीमन्नारायणविरचिते स्मृतिसारोद्धारे **नवरत्नपरीक्षाध्यायः**

समाप्तिमगमत् ॥

श्रीसांबसदाशिवार्पणमस्तु ॥

பத்மராகம்.

(9–10) சுட்ட சங்கு, மணிராகம் இவைகளை சமபாகம் பொடி செய்து, கண்ணுடி குப்பியில் (கிண்ணம்) அவைகளைக் கலந்து, இதனுல் ஆலங்கட்டிகளை நனைத்து (ஆலங்கட்டிகளை இதனுள் புதைத்து) பிறகு தீயில் எரிக்க பத்மராகக் கற்களாகும்.

ஸ்ரீமந் நாராயணன் செய்த ஸ்மிருதி ஸாரோத்தாரத்தில்,

நவரத்ன பரீக்ஷை முற்றும்.

॥ श्रीः ॥

॥ श्रीगणेशाय नमः ॥

॥ ईश्वरदीक्षितीये रत्नपरीक्षा ॥

सिम्हळस्याकरोद्भूता महानीलास्तु ते स्मृताः ।
क्षीरमध्ये क्षिपेन्नीलं क्षीरं चेन्नीलतां व्रजेत् ॥ १ ॥

इन्द्रनीलमिति ख्यातमिति चागस्त्यभाषितम् ।

इति **रत्नशास्त्रे** अभिधानात् इन्द्रनीलाः क्षीरनीलीकरणसमर्थाः सिम्हळोद्भवाः । उत्पत्तिभेदादपि तस्य भेदः प्रतिपादितः **रत्नशास्त्रे** —

ஈசுவர தீக்ஷிதீயத்தில் ரத்ன பரீக்ஷை.

(1–2) சிங்களத்தின் ரத்னாகரங்களில் கிடைக்கும் நீலங்கள் மஹாநீலங்களாம். (சிறந்தவைகளாம்).

நீல ரத்னத்தைப் பாலில் போட்டால் அந்தப் பால் நீலநிறமாகக் காணப்பட்டால் அதற்கு "இந்திரநீலம்" எனப் பெயர், என்று அகத்திய முனிவர் கூறியுள்ளார், என ரத்ன சாஸ்த்திரத்தில் கூறியிருப்பதால் இந்திரநீலக் கற்கள் பாலை நீல நிறமாகக் காட்டும் தன்மையுள்ளவைகளாம். இவைகள் சிங்களத்திலுண்டானவைகளாம். அவைகள் உண்டாகும் வகைகளின் பேதங்களாலும், அவைகளின் பேதங்கள் ரத்ன சாஸ்த்திரத்தில் கூறப்படுகின்றன.

बललोचनसंभूतं हरकण्ठविषोद्भवम् ॥ २ ॥
द्विविधन्तु महानीलं प्रोक्तं तच्छास्त्रवित्तमैः ।

(2–3) பலாசுரனின் கண்களிலிருந்து உண்டானது ஒன்று. பரமேசுவரனின் கழுத்திலுள்ள விஷத்திலிருந்து உண்டானது மற்றொன்று. இவ்விரண்டும் மஹா நீலமென்று ரத்ன சாஸ்த்திரமறிந்தவர்கள் கூறுகின்றனர்.

संज्ञा त्वाष्ट्री रवेर्भार्या तत्तेजस्सोढुमक्षमा ॥ ३ ॥
आत्मच्छायां नियोज्यागात्तपसे काननं वरम् ।
रविश्च तत्र तां गत्वा दृष्ट्वैवातीव मोहितः ॥ ४ ॥

अश्वाकारां च धावन्तीमश्वरूपस्य धावतः ।
यत्र यत्रापतद्रेतस्तत्र तत्र विवस्वतः ॥ ५ ॥

महानीला बभूवुश्च सन्धार्या देवमानुषैः ।

(3–6) த்வஷ்டாவின் பெண்ணும் சூரியனின் பத்னியுமான ஸம்ஜ்ஞை என்பவள், சூர்ய வீர்யத்தைத் தாங்கமுடியாமல், தனது நிழலைத் (சாயையை) தனக்குப் பதிலாக நிறுத்திவிட்டு, தவம்புரியக் காட்டிற்குச் சென்றாள். சூரியனும் அவளை விரட்டிக்கொண்டு சென்று அவளைக் கண்டு மோஹித்தார். அவள் குதிரை உருவங்கொண்டு ஓடினாள். சூரியனும் குதிரை உருவங்கொண்டு அவளைத் துரத்திக்கொண்டு சென்றார். அப்பொழுது சூரியனுடைய தேஜஸ் பற்பலவிடங்களில் சிந்திற்று. தேஜஸ்ஸு சிந்தியவிடங்களில் மஹாநீலங்கள் உண்டாயின. அவைகள், தேவர்களும், மனிதர்களும் தரிக்கத் தக்கவைகளாம்.

विश्वरूपवधप्राप्तदोषशान्त्यै पुरन्दरः ॥ ६ ॥
अश्वमेधं चकाराथ तत्समाप्तौ तदङ्गकम् ।
चाक्षुषं च मलं यत्र विमुक्तं तत्र देशके ॥ ७ ॥

इन्द्रनीला इति ख्याता मणयः संभवन्ति हि । इति ॥

(6–8) விசுவரூபனை வதைத்த இந்திரன் அந்த பாபத்தைப் போக்க அசுவமேதம் செய்தான். அதன் முடிவில் அவன் கண்களிலிருந்தும் அங்கத்திலிருந்தும் வியர்வை சிந்திற்று. அது சிந்தியவிடத்தில் இந்திரநீல மணிகள் உண்டாயின.

मणिप्रवरं - मणिश्रेष्ठं । लक्षणमुक्तं रत्नशास्त्रे ।

மணிப்ரவரம் என்பதற்கு ரத்னத்தில் சிறந்தது என்று பொருள். அதன் லக்ஷணம் ரத்ன சாஸ்த்திரத்தில் கூறப்பட்டிருக்கிறது.

मुक्ताप्रवालवैडूर्यवज्रनीलानि गारुडम् ॥ ८ ॥
पद्मरागं पुष्परागं गोमेदकमतः परम् ।
नव रत्नानि पाषाणाः भासयन्ति सदा नरान् ॥ ९ ॥

(8–9) முத்து, பவழம், வைடூரியம், வைரம், நீலம், பச்சை, பதுமராகம், புஷ்பராகம், கோமேதகம் என்ற ஒன்பது வித கற்களும் ஒன்பது ரத்னங்களாம். இவைகள் மனிதர்களைப் பிரகாசிக்கச் செய்கின்றன.

करीन्द्रजीमूतवराहशङ्खमत्स्याहिशुक्त्युद्भववेणुजानि ।

मुक्ताफलानि प्रथितानि लोके तेषान्तु शुक्त्युद्भवमेव भूरि ॥ १० ॥

(10) கஜசிரேஷ்டம், மேகம், பன்றி, சங்கம், மீன், பாம்பு, சிப்பி, மூங்கில் இவைகளில் முத்துக்கள் உண்டாகின்றன என்பது உலகில் பிரஸித்த மான விஷயம். இவைகளில் சிப்பியில் உண்டாகும் முத்துக்களே அதிகமாகக் கிடைக்கின்றன.

आगस्त्ये रत्नशास्त्रे च —

बलो नामाभवच्छ्रीमान् दानवेन्द्रो महाबलः ॥ ११ ॥

तस्यास्थि वज्रं दशनाश्च मुक्तास्तथा च रक्तं खलु पद्मरागः ।

रोमाणि वैडूर्यमिति प्रसिद्धं प्रवालमासीत्पिशितं महार्घम् ॥ १२ ॥

नेत्रं महानीलमभूत्प्रशस्तं पित्तं च गारुत्मतरत्नमासीत् ।

आसीत्कफस्तस्य च पुष्परागः मेदश्च गोमेदकतामवाप ॥ १३ ॥

(11–13) அகஸ்திய மாமுனிவர் கூறியுள்ள ரத்ன சாஸ்திரத்தில்— மிகுந்த சோபையும் மஹா பலமும் உடைய பலன் என்ற அஸுரன் இருந்தான். அவனுடைய எலும்பு வஜ்ரமாகவும், பற்கள் முத்துக்களாகவும், ரக்தம் பதும ராகமாகவும், உரோமங்கள் வைடூரியமாகவும், மாமிசம் பவழமாகவும், கண் நீல மணியாகவும், பித்தம் பச்சையாகவும், கபம் புஷ்பராகமாகவும், ஊந்தண் கோமேதகமாகவும் ஆயிற்று என்று கூறப்பட்டிருக்கிறது. மேலும்,

जलजा स्थलजा चेति मुक्ताजातिर्द्विधा मता ।

वज्राघातप्रकीर्णा या दन्तपङ्क्तिर्बलस्य तु ॥ १४ ॥

सा तु त्रयोदशस्थाने विप्रकीर्णाऽभवत्तदा ।

वराहस्य च दंष्ट्रायां फणे च पवनाशिनाम् ॥ १५ ॥

करिदन्ते बलाकानां कण्ठे स्त्रीणां तथैव च ।

शङ्खे मत्स्ये करे (घने) चैव वंशपुण्ड्रेक्षुपर्वसु ।

शालिस्तम्भे च शुक्तौ च भुजे करटवाजिनः ॥ १६ ॥

(14—16) முத்துக்களில் ஜலஜம் ஸ்தலஜம் என்று இரண்டு விதமாம். பலாசுரனின் பற்கள் வஜ்ராயுதத்தால் சிதைவுற்று, 1. பன்றியின் பல்–2, பாம்

பின் படம்-3. யானையின் தந்தம்-4. நாரையின் கழுத்து-5. ஸ்திரீயின் கழுத்து -6. சங்கம்-7. மீன் -8. மேகம் -9. மூங்கில் கணு - 10. நாமக்கரும்பின் கணு - 11. சம்பாப்பயிரின் தாள் - 12. சிப்பி - 13. கரடவாஜியின் (கோவேறு கழுதையின்) புஜம் — ஆகிய 13 இடங்களில் சிதறின. இந்த 13 இடங்களிலும் முத்துக்கள் உண்டாயின.

नारीबलाकाकण्ठाभ्यां भुजात्करटवाजिनः ।

तिस्रो जाताश्च मुक्तास्तु न सन्त्येवातिदुर्लभाः ।। १७ ।।

(17) ஸ்திரீயின் கழுத்து, நாரையின் கழுத்து, கோவேறு கழுதையின் புஜம், இம்மூன்று ஸ்தானங்களிலும் உண்டாகும் முத்துக்கள் இல்லை என்றே சொல்லி விடலாம். கிடைப்பது மிகவும் துர்லபம்.

सुतारत्वं सुवृत्तत्वं नैर्मल्यं घनता तथा ।

स्निग्धताऽस्फुटितत्वं च षड्गुणाः परिकीर्तिताः ।। १८ ।।

(18) நக்ஷத்திரத்தைப் போன்ற காந்தி, எங்கும் உருண்டையான வடிவம், தோஷங்களில்லாமை, அதிக எடை நிற்கும் கனம், மினிமினிப்பு, விரிசல் முதலியவை இல்லாமை என்று, முத்துக்களின் நற்குணங்கள் ஆறு விதமாகும்.

काकपाणिः (दः) स्रुकं (स्रवन्) नीरः पार्श्वस्फोटस्तथाऽनलः ।

नीलवर्णोथ दद्रुस्तु श्यामलो रक्तबिन्दुकः ।। १९ ।।

एते न धारणे योग्या धर्तुर्हानिप्रदास्सदा ।

(19-20) காக்கைக் கால் போன்ற அடையாளமுள்ளது, ஈரமிப்பு உள்ளது, பக்கத்தில் உடைந்தது, நெருப்புப் பொரிபோலிருப்பது, நீலநிறமானது, ஆமைபோலிருப்பது அல்லது சொரசொரப்பாக இருப்பது அல்லது தோஷமுள்ளது, பச்சை நிறமாக இருப்பது, சிகப்புப் புள்ளியுள்ளது - இத்தகைய தோஷமுள்ள முத்துக்களை தரிக்கலாகாது. தரிப்பவனுக்கு அழிவை உண்டுபண்ணும்.

प्रवालः कृमिभक्षश्चेत् वर्जनीयः प्रयत्नतः ।। २० ।।

वैडूर्यं बिन्दुसंयुक्तं न धार्यं शुभलिप्सुभिः ।

वज्रं पर्पटिकायुक्तं बिन्दुयुक्तं विसर्जयेत् ।। २१ ।।

मरतकं पेटकयुतं न धार्यं शुभमिच्छता ।

(20–22) பூச்சிகளரித்த பவழத்தை விலக்கிவிடவேண்டும். புள்ளியுள்ள வைடூரியத்தை சுபத்தை விரும்புகிறவன் தரிக்கலாகாது. மண் கலந்தது, அல்லது வெளிர் படர்ந்தது, புள்ளியுள்ளது, இந்த வைரங்களை ஒதுக்கிவிடவேண்டும். நடுவில் குழிந்த மரகதத்தை சுபத்தை விரும்புகிறவன் தரிக்கலாகாது.

पुष्परागः पुष्टिवर्धनः ॥

புஷ்பராகம் புஷ்டியை விருத்திசெய்யும்.

भारद्वाजस्मृतौ च —

बिन्द्वावर्ततुषत्रासलेखाकलङ्ककीलकाः ॥ २२ ॥
सप्तैते कथिता दोषाः रत्नशास्त्रविशारदैः ।
जम्बूफलवदाकारस्तत्र चूचुकसन्निभः ॥ २३ ॥
चूडामणिवदाकारः बालवत्सस्य शृङ्गवत् ।
अयं चतुर्विधो बिन्दुः स्त्रीसन्ततिविनाशकृत् ॥ २४ ॥

(22–24) பாரத்வாஜஸ்மிருதியில், – பிந்து – ஆவர்தம் – துஷம் – த்ராஸம் – லேகை – களங்கம் – கீலகம் – என்று ஏழுவித ரத்ன தோஷங்கள் கூறப்பட்டிருக்கின்றன.

அவைகளில் "பிந்து" என்ற தோஷம் நாவல் கனியைப் போலவும், முலைக்காம்பைப் போலவும், சூடாமணியைப் (சூடாமணி – சிரோரத்னம் அல்லது காக்கை மூக்குக் கனி) போலவும், இளங்கன்றுக்குட்டியின் கொம்பைப் போலவும் நான்கு விதமாகும். இவைகள் ஸ்திரீ ஸந்ததிகளை அழித்துவிடும்.

शङ्खमस्तकसंकाशः सरिद्वेणिभ्रमोपमः ।
आवर्तो द्विप्रकारोयं सदा विभ्रमकारकः ॥ २५ ॥
गोधूमचूर्णसदृशः व्याप्य रत्नं समन्ततः ।
आस्ते तत्तुषसंज्ञोयं सर्वदाङ्गक्षतप्रदः ॥ २६ ॥

(25–26) "ஆவர்த்தம்" – (சுழி) என்பது இரண்டு விதம். ஒன்று சங்கத்தின் தலையைப்போலிருக்கும். மற்றொன்று, நதிப்பிரவாகத்தின் சுழலைப்போல் இருக்கும். இவ்விரண்டுவித தோஷங்களும் சித்தப்பிரமையை உண்டுபண்ணும்.

"துஷம்" என்பது கோதுமை மாவைப்போல எங்கும் படிந்திருக்கும். இந்த தோஷம் எப்பொழுதும் உடம்பை இளைக்கச் செய்யும்.

त्रासाख्यः त्रुटितप्रख्यः शुक्त्यन्तररुजासमः ।

त्रासस्स द्विप्रकारोयं त्राससञ्जननस्सदा ॥ २७ ॥

रविरश्मिसमाकारा सूत्रपातवदाकृतिः ।

वर्षपातवदाकारा त्रिधा रेखाऽतिकष्टदा ॥ २८ ॥

(27–28) "த்ராஸம்" என்பது உடைந்ததுபோலவும், சிப்பியின் மத்தியில் உள்ள ரோகம் அல்லது குஷ்டத்தைப் போலவும் இருக்கும். இவ்விரண்டு தோஷங்களும் பயத்தையுண்டுபண்ணும்.

"ரேகை" என்பது சூரிய கிரணம் போலவும், கயிறு விழுந்தது போலவும், மழைக்கால் போலவும் இருக்கும். இம்மூன்றும் மிகுந்த கஷ்டத்தைக் கொடுக்கும்.

कलङ्कः कृष्णलोहाभः कृष्णाभ्रसदृशाकृतिः ।

शिखिपिञ्छसमाकारः त्रिधैतदसुनाशकृत् ।

कीलकः कीलवत्तिष्ठेत सर्वदा हृदयार्तिकृत् ॥ २९ ॥

(29) "களங்கம்" என்பது இரும்பு போலவும், கருப்பு அப்பிரகம் போலவும், மயில் தோகை போலவும் மூன்றுவிதமாகும். இந்த தோஷம் பிராண ஹானியை உண்டுபண்ணும்.

"கீலகம்" என்பது முளையைப்போல இருக்கும். இது மனோவியாதியை உண்டுபண்ணும்.

एवं रत्नेषु दोषाणां लक्षणं समुदाहृतम ।

गोमेदकः पुष्पराग वैडूर्यः शीतरुङ्मणिः ।

एते च स्फटिकप्रख्याः फले स्फटिकजातयः ॥ ३० ॥ इति ॥

(30) இவ்விதம் ரத்னங்களின் தோஷ லக்ஷணங்கள் கூறப்பட்டிருக்கின்றன.

கோமேதகம், புஷ்பராகம், வைடூரியம், பச்சை இவைகளும் ஸ்படிகம் போன்றவைகளே. பலவிஷயத்தில் ஸ்படிக ஜாதிகளேயாம் என்று (பாரத்வாஜ ஸ்மிருதியில்) கூறப்பட்டிருக்கின்றது.

पद्मरागो रविमणिः शृङ्गारो हारनायकः ।

सलोहितो जातशृङ्गः कुरुविन्दोऽतिलोहितः ॥ ३१ ॥

सौगन्धिको मरालस्स्यात् नीलगन्धी तु धू(म्र)लः ।

पक्वदाडिमबीजाभं माणिक्यं शिखरं मतम् ।
तत्तु पल्लवरागः स्यात् पल्लवेन समप्रभम् ॥ ३२ ॥ इति ॥

(31–32) பதுமராகத்திற்கு ரவிமணிஎன்றும், சிரிங்காரம் என்றும், ஹாரநாயகம் என்றும் பெயர்.

அது சிகப்பாக இருந்தால், ஜாதச்ரிங்கம் என்று பெயர். அது அதிகச் சிகப்பாக இருந்தால், குருவிந்தம் என்று பெயர். ராஜஹம்ஸ (த்தின் மூக்கின்) நிறமாக இருந்தால், (வெண்சிகப்பு நிறமாக இருந்தால்), ஸௌகந்திகம் என்று பெயர். புகை நிறமாக இருந்தால், நீலகந்தி என்று பெயர்.

நன்ருகப் பழுத்த மாதுளை முத்தின் நிறமாக இருந்தால், மாணிக்கம் என்றும், சிகரம் என்றும் பெயர்.

தளிரைப் போன்ற நிறமுடையதானுல், அதற்குப் பல்லவராகம் என்று பெயர் கூறப்பட்டிருக்கிறது.

गारुत्मतं मरकतमश्मगर्भं हरिन्मणिः ।
गाढमुल्लसितं चैव पेशलं पित्तकं तथा ।
मुग्धं च पृथुकं चेति षड्विधोऽयं हरिन्मणिः ॥ ३३ ॥ इति निघण्टुः ॥

(33) காருத்மதம் – மரகதம் – அச்மகர்ப்பம் – ஹரிங்மணி என்று பச்சையின் பெயர்கள் நான்கு. இது காடம் – உல்லஸிதம் – பேசலம்–பித்தகம்–முக்தம்–பிருதுகம், என்று ஆறு விதமாம் – என்று நிகண்டுவில் கூறப்பட்டிருக்கிறது.

उत्पलपरिमळे तु द्वाविंशतिरत्नान्युक्तानि —

वज्रेन्द्रनीलमरतककर्केतनपद्मरागरुधिराक्षाः ।
वैडूर्यविपुलविमलकराजमणिस्फाटिकशशिकान्ताः ॥ ३४ ॥
सौगन्धिकगोमेदकशङ्खमहानीलपुष्परागाख्याः ।
ब्रह्ममणिज्योतीरससीस्यकमुक्ताप्रवाळानि ॥ ३५ ॥

(34–35) உத்பல பரிமளம் என்ற நூலில் 22 விதம் ரத்னங்கள் கூறப்பட்டிருக்கின்றன. அவைகள்– வஜ்ரம் 1, இந்திரநீலம் 2, மரகதம் 3, கர்கேதனம் 4, பத்மராகம் 5, ருதிராக்ஷம் 6, வைடூரியம் 7, விபுலம் 8, விமலகம் 9, ராஜமணி 10, ஸ்படிகம் 11, சந்திரகாந்தம் 12, ஸௌகந்திகம் 13, கோமேதகம் 14,

சங்கம் 15, மஹாநீலம் 16, புஷ்பராகம் 17, பிரம்ஹமணி 18, ஜ்யோதீரஸம் 19, ஸீவ்யகம் 20, முத்து 21, பவழம் 22 என்பனவாம்.

स्निग्धा विशुद्धास्समरागिणश्च आपीतवर्णा गुरवः स्थिराश्च।
त्रासव्रणव्याळविवर्जिता ये कर्केतनास्ते परमं पवित्रम् ॥ ३६ ॥

पत्रेण काञ्चनमयेन च वेष्टयित्वा न्यस्तं यदा हुतवहे भवति प्रकाशम्।
शीतीकृतं यदि भवेत् न च रूक्षवर्णं कर्केतनं भवति तत् पृथिवीसमूल्यम् ॥

(36–37) நல்ல மெருகு (பளபளப்பு), தோஷமில்லாமை, (துஷாதி தோஷமில்லாமை) எங்கும் நிறைந்த ஒளி – சிறிது மஞ்சளான நிறம் – கனம் – அழுத்தம்– இந்த குணங்களிருப்பதுடன் பொறிசல், உடைசல், விகாரமான உருவம் – இந்த தோஷங்கள் இல்லாமலும் இருந்தால், அதற்கு "கர்கேதனம்" என்று பெயர்

இந்த ரத்னத்தைத் தங்க இலையில் (மெல்லிய தங்கத் தகட்டில்) வைத்து மூடி நெருப்பில் வைத்தால், பிரகாசமாக இருக்கும் (ரத்னத்தின் பிரகாசம் நன்கு தெரியும்). அதைக் குளிரவைத்தால் அதன் வர்ணம் விகாரப்படாது. இந்த ரத்னத்திற்கு பூமண்டலம் முழுமையுமே விலை மதிப்பாகும்.

आकाशतलसंलक्ष्यः उपलः स्फटिकः स्मृतः।
मृणाळशंखधवळः किञ्चिद्वर्णान्तरान्वितः ॥ ३८ ॥

मध्ये च पाण्डरमतीव विशुद्धवर्णं यत्विन्द्रनीलरुचिपूरसमानदेहम्।
ऐश्वर्यभृत्यजनकं रुधिराक्षमेवं पक्वं च तत्किल भवेत् सुमनोज्ञवर्णम् ॥ इति ॥

(38–39) ஸ்படிக ரத்னத்தை ஆகாசத்தில் தூக்கிப் பார்க்கவேண்டும். இது தாமரைத் தண்டுபோலும், சங்கத்தைப்போலும் வெண்மையாக இருக்கும். வேறு நிறங்களும் சிறிது கலந்து காணப்படும். (இது சிலாக்கியமாம்).

மத்தியில் வெளுப்பாகவும், நல்ல சுத்தமான நிறமுள்ளதாகவும், நாலாபுறமும் இந்திரநீலம் போன்ற ஒளி வீசுவதாகவும் இருந்தால் இதற்கு "ருதிராக்ஷம்"(?) என்று பெயர். இது நன்கு பக்குவ தசையை அடைந்தால் மிகவும் மனதைக் கவரும். இது செல்வத்தையும் தாஸீதாஸர்களையும் கொடுக்கும்.

आदित्यस्य तु पद्मरागममलं मुक्ताफलं शीतगोः
माहेयस्य च विद्रुमं मरतकं सौम्यस्य गारुत्मतम्।

देवेज्यस्य च पुष्परागमसुरामात्यस्य वज्रं शनेः
नीलं निर्मलमन्ययोस्तु गदिते गोमेदवैडूर्यके ॥ ४० ॥

(40) ஆதித்தியனுக்கு பத்மராகமும், சந்திரனுக்கு முத்தும், செவ்வாய்க்குப் பவழமும், புதனுக்குப் பச்சையும், குருவுக்குப்புஷ்பராகமும், சுக்கிரனுக்கு வைரமும், சனிக்கு நீலமும், ராகுவுக்கு கோமேதகமும், கேதுவுக்கு வைடூரியமும் ரத்னங்களாகக் கூறப்பட்டிருக்கின்றன.

वाहटे च —

रसे रसायने दाने धारणे देवतार्चने ।
सुलक्ष्माणि सुजातीनि रत्नान्युक्तानि सिद्धये ॥ ४१ ॥

माणिक्यं पद्मरागाख्यं द्वितीयं नीलगन्धि च ।
कुशेशयदळच्छायं स्वच्छं स्निग्धं मरुत् (गुरु) स्फुटम् ।
वृत्तायतं समं गात्रं माणिक्यं श्रेष्ठमुच्यते ॥ ४२ ॥

गात्रमिति - स्थूलम् ।

(41–42) ரஸ பதார்த்தமாக உபயோகிப்பதற்கும், ரஸாயனத்திற்கும், (வியாதி, நரை, திரை, மூப்பு இவைகளை விலக்கக்கூடியதற்கு ரஸாயனம் என்று பெயர்) தானம் செய்வதற்கும், தரித்துக்கொள்ளவும், தெய்வங்களுக்குச் சாத்துவதற்கும், நல்ல லக்ஷணமான நல்ல ஜாதி ரத்னங்களையே உபயோகிக்க வேண்டும். அவைகள்தான் கூறியுள்ள பலனைக் கொடுக்கும்.

மாணிக்கமானது, பத்மராகம், நீலகந்தி என்று இருவகையாம். தாமரை மலரின் இதழின் நிறமும், தூய்மையும், பளபளப்பும், கனமும், பூரிப்பும், வட்டமாய் விரிந்தும், காத்ரமாகவும் இருக்கும் மாணிக்கம் சிறந்ததாம்.

காத்ரம்-உருவத்தில் பெரிது.

नीलगङ्गाम्बुसंभूतं नीलगर्भारुणच्छवि ।
पूर्वमाणिक्यवत् श्रेष्ठं माणिक्यं नीलगन्धि तत् ॥ ४३ ॥

(43) நீல கங்கா ஜலத்தில் உண்டாகி, உட்புறம் நீலநிறமான சிவப்பு நிறமுள்ளது நீலகந்தி மணியாம். இதுவும் முன் கூறப்பட்ட மாணிக்கத்தைப்போல் (தோஷமில்லாமல் குணங்களுள்ளதாயின்) சிறந்ததே.

रन्ध्रकार्कश्यमालिन्यरौक्ष्यवैशद्यसंयुतम् ।
चिपिटं लघुवक्त्रं च माणिक्यं दुष्टमष्टधा ॥ ४४ ॥

(44) துவாரம், கரடுமுரடு, மங்கல், பார்வைக்கு விகாரம், வெலத்தி, (ஒளி சிதறியது அல்லது உடைந்தது.) அவல் உருவம், கனமின்மை, கோணல், இவை எட்டும் மாணிக்கத்தின் தோஷங்கள்.

हृादि श्वेतं लघु स्निग्धं रश्मिमत् निर्मलं महत् ।
ख्यातं तोयप्रभं वृत्तं मौक्तिकं नवधा शुभम् ॥ ४५ ॥

(45) மனோஹரமானது, வெண்மையானது, இலேசானது, பளபளப்புள்ளது, ஒளியுள்ளது, மங்கலாக இல்லாததது, உருவத்தில் பெரிது, ஜல நிறமானது, வட்டவடிவமானது ஆகிய ஒன்பது வித முத்துக்களும் புகழப்பட்டவைகளாம்.

रूक्षाङ्गं निर्मलं (समलं) श्यामं ताम्राभं लवणोपमम् ।
अर्धशुद्धं च विकटं ग्रन्थिलं मौक्तिकं त्यजेत् ॥ ४६ ॥

(46) முத்தானது, விகாரமாகவோ, அழுக்குப்படிந்தோ, பச்சையாகவோ, உப்பைப்போலவோ, பாதி சுத்தமாகவோ, கரடுமுரடாகவோ, முடிச்சு விழுந்தோ இருந்தால், அதைத் தள்ளிவிடவேண்டும்.

पक्वबिम्बफलच्छायं वृत्तायतमवासमम् [पांसुलम्] ।
सि(शु)द्धमव्रणकं स्थूलं प्रवालं सप्तधा मतम् ॥ ४७ ॥

(47) கோவைக் கனியின் நிறமுள்ளது, உருண்டையானது, நீண்ட உருவமுள்ளது, அழுக்கு இல்லாதது, சுத்தமானது, வடுவில்லாதது, உருவத்தில் பெரிது என ஏழுவிதமான பவழங்களும் சிறந்தவைகள்.

पाण्डरं धूसरं रूक्षं सव्रणं कोटरान्वितम् ।
निर्भारं शुद्धवर्णं च प्रवालं नेष्यतेऽष्टधा ॥ ४८ ॥

(48) வெண்மை நிறமானது, அழுக்குப் படிந்தது அல்லது சிறிது வெள்ளிர் நிறமானது, விகாரமானது அல்லது கரடுமுரடானது, வடுப்பட்டது அல்லது உடைந்தது, பொந்து விழுந்தது, எடை நிற்காதது, சுத்தவர்ணம் (நிறமில்லாதது?) ஆகிய எட்டுவிதப் பவழங்களும் விரும்பத்தகாதவைகள்.

हरिद्वर्णं गुरु स्निग्धं स्फुटद्रश्मिचयं शुभम् ।

मसृणं भासुरं ताक्ष्यं गात्रं सप्तगुणं मतम् ॥ ४९ ॥

(49) நீலமும் மஞ்சளும் கலந்த நிறமானது, அல்லது பசுமைநிறமானது, கனமானது, பளபளப்புள்ளது, வீசும் ஒளிப்பெருக்குடையது, கொழுகொழுப்பானது, ஒளியுள்ள பச்சை நிறம் உள்ளது, உருவில் பெரியது, இவ்வேழும் பவழத்தின் குணங்களாம்.

कठिनं कर्कशं नीलं पाण्डु कृष्णं सलाघवम् ।
चिपिटं विकटं कृष्णं रूक्षं ताक्ष्यं न शस्यते ॥ ५० ॥

(50) அழுத்தமானது, சுறசுறப்புள்ளது, நீல நிறமானது, வெண்நிறமானது, கறுப்பு நிறமானது, எடை நிற்காதது, அவல் போன்றது அல்லது தகட்டையானது, விறிந்தது, கருப்பானது, அருவருக்கத்தக்கது, நீலநிறமானது இவைகள் சிறந்தவைகளல்ல.

पुष्परागं गुरु स्निग्धं स्वच्छं स्थूलं समं मृदु ।
कर्णिकारप्रसूनाभं मसृणं शुभमष्टधा ॥ ५१ ॥

(51) கனம், பளபளப்பு, தூய்மை, காத்ரம், ஏற்ற அமைச்சல், மிருதுவாக இருத்தல், கர்ணிகாரப்பூவின் நிறம் (கர்ணிகாரம் கொன்னையின் பேதம்) கொழுகொழுப்பு இவ்வெட்டும் புஷ்பராகத்தின் சுபகரமான குணங்களாம்.

निष्प्रभं कर्कशं रूक्षं पीतधाम नतोन्नतम् ।
कपिलं कलिलं पाण्डु पुष्परागं परित्यजेत् ॥ ५२ ॥

(52) ஒளி இல்லாதது, சொறசொறப்பானது, அருவருக்கத் தக்கது, மஞ்சள் நிறமானது, மேடுபள்ளமானது, பொன்னிறமானது, கலங்கலானது, (நிச்சயிக்க முடியாத நிறமுள்ளது), வெண்மையானது, இந்த குணங்களுள்ள புஷ்பராகங்களை நீக்கிவிடவேண்டும்.

वज्रं तु त्रिविधं प्रोक्तं नरो नारी नपुंसकम् ।
पूर्वं पूर्वं महाश्रेष्ठं रसवीर्यविपाकतः ॥ ५३ ॥

अष्टाश्रं चाष्टफलकं षट्कोणमतिभासुरम् ।
निर्जितेन्द्रधनुर्वारित(ध)रं पुंवज्रमुच्यते ॥ ५४ ॥

तदेव चिपिटाकारं स्त्रीवज्रं वर्तुलायतम् ।
वर्तुलं कर्णकोणाग्रं किञ्चिद्गुरु नपुंसकम् ॥ ५५ ॥

(53–55) வைரமானது, ஆண், பெண், அலி என்று மூன்று விதம். இவைகளில் அலியைவிட பெண் வைரமும், அதைவிட ஆண் வைரமும் சிறந்ததாம்.

எட்டு தளம், எட்டுப்பட்டை, ஆறுகோணம், அதிகப்பிரகாசம், மேகத்தின் மீது விழுந்த வானவில்லைப் பழிக்கும் பற்பல நிறம் இவைகளுள்ளது ஆண் வைரமாம். அதுவே அவலைப்போலவோ (தகட்டையாகவோ) நீண்ட வட்ட வடிவமாகவோ இருந்தால் பெண் வைரமாகும். வட்ட வடிவமாகவோ ஒரு மூலையில் காது போன்று நீண்டோ இருந்தால், அது அலி வைரமாம். இது சிறிது கனமாகவும் இருக்கும்.

स्त्रीपुंनपुंसकं वज्रं योज्यं स्त्रीपुंनपुंसके ।
व्यत्यासान्नैव फलदं पुंवज्रेण विना क्वचित् ॥ ५६ ॥

(56) ஆண் வைரத்தை ஆணும், பெண் வைரத்தைப் பெண்ணும், அலி வைரத்தை அலியும்தான் உபயோகிக்கவேண்டும். இதை மாற்றி உபயோகித்தால் சிறிதும் பலனைக் கொடுக்காது. புருஷ வைரத்திற்கு இந்த விதிவிலக்கு இல்லை. ஆண், பெண், அலி எல்லோரும் உபயோகிக்கலாம் என்பது பொருள்.

श्वेतादिवर्णभेदेन तदेवैकं चतुर्विधम् ।
ब्रह्मक्षत्रियविट्शूद्रं स्वस्ववर्णे शुभप्रदम् ॥ ५७ ॥

उत्तमोत्तमवर्णे हि हीनवर्णे फलप्रदम् ।
न्यायोऽयं भैरवेणोक्तः पदार्थेष्वखिलेष्वपि ॥ ५८ ॥

(57–58) வெளுப்பு முதலிய நிறவேற்றுமையால் வைரம் நான்கு விதமாகும். அவைகள் பிராமண ஜாதி, க்ஷத்திரிய ஜாதி, வைச்ய ஜாதி, சூத்ர ஜாதி என்பன. அந்தந்த ஜாதி வைரங்களையே அந்தந்த ஜாதியினர் தரிக்கவேண்டும். உத்தம ஜாதி ரத்னம் ஹீன ஜாதிக்கு நல்ல பலனையே கொடுக்கும். இந்த நியாயம் எல்லா பதார்த்தங்களுக்கும் கூறப்பட்டது என்று பைரவர் கூறியுள்ளார்.

काशः त्रासश्च बिन्दुश्च रेखा च जलगर्भता ।
सर्वरत्नेष्विमे पञ्च दोषास्साधारणा मताः ॥ ५९ ॥

(59) வெள்ளை படர்தல்—பொறிசல்—புள்ளி—கோடு—உட்புறம் ஜலம் தங்குதல் என்ற ஐந்து தோஷங்களும் எல்லாவித ரத்னங்களுக்கும் பொதுவான தோஷங்கள்.

जलनीलेन्द्रनीलं च शक्रनीलं तयोर्वरम् ।
श्वैत्यगर्भितनीलाभं लघु तत् जलनीलकम् ॥ ६० ॥

काष्णर्यगर्भितनीलाभं सभारं शक्रनीलकम् ।
एतच्छायं गुरु स्निग्धं स्वच्छं पिण्डितविग्रहम् ॥ ६१ ॥

मृदु मध्योल्लसज्ज्योतिः सप्तधा नीलमुत्तमम् ।

(60–62) ஜல நீலம், இந்திர நீலம் என நீலம் இரண்டு விதம். இவ்விரண்டில் இந்திர நீலம் சிறந்ததாம்.

உட்புறம் வெளுப்பாகவும், மேலே நீலமாகவும், இருப்பதுபோல் காணப்படும். இலேசாகவும் இருக்கும். இது ஜல நீலமாம்.

உள்ளே கருப்பாகவும், வெளியில் நீலமாகவும், இருப்பதுபோல காணப்படும். கனமாகவும் இருக்கும். இதற்கு இந்திர நீலம் என்று பெயர்.

கருநீல நிறமானது – கனமானது – பளபளப்புள்ளது – தூய்மையுள்ளது (இவைகள் யாவும்) ஒருங்கு சேர்ந்த உருவமுள்ளது – மிருதுவானது – நடுவில் வீசும் ஒளியுள்ளது – என நீலம் ஏழுவிதமாம். இவை யாவும் உத்தமமானவைகளாம்.

कोमलं विहतं वर्णं निर्भारं रक्तगन्धि च ॥ ६२ ॥
चिपिटाभं सरूक्षं च जलनीलं तु सप्तधा ।

(62–63) ஸம்பூர்ண நிறம் உண்டாகாதது—ஒரு பாதி நிறம் உள்ளதாகவும் மற்றொரு பாதி நிறம் இல்லாமலும் இருப்பது – அரைப் பங்கு நிறம் உள்ளது – கனமில்லாதது – ரக்த கந்தி (சிறிது செந்நிறம் கலந்தது) அவலைப் போன்றது – பளபளப்பில்லாதது என ஜல நீலம் ஏழு விதம்.

கோமளம் என்பதற்கு ரத்னத்திற்கு இருக்கவேண்டிய நிறம் முழுமையும் உண்டாகாதது என்று பொருள். விஹதம் என்பதற்கு கல்லின் ஒரு பாதியில் நல்ல நிறமுள்ளதாகவும் மற்றொரு பாதியில் கொஞ்சமும் நிறம் இல்லாதது என்று பொருள். வர்ணம் என்பதற்கு ஸஹஜமாக இருக்கவேண்டிய நிறத்தில் அரைப் பங்கு நிறம் உள்ளது என்று பொருள்.

गोमेदसमरागत्वात् गोमेदं वज्रमुच्यते ॥ ६३ ॥

सुस्वच्छगोजलच्छायं स्वच्छं स्निग्धं घनं गुरु ।
निर्दलं मसृणं दीप्तं शस्तं गोमेदमष्टधा ॥ ६४ ॥

(63-64) கோமூத்திரம் போன்ற நிறமுடையதாதலால் இதற்கு கோமேதம் என்று பெயர். இது வஜ்ர ஜாதியைச் சேர்ந்ததாகக் கூறப்படுகிறது.

நல்ல வெளுப்பான பசுவின் மூத்திரத்தின் நிறமுள்ளது – சுத்தமானது – பளபளப்புள்ளது – அழுத்தமானது – கனமானது – தளமில்லாதது – கொழுகொழுப்பானது – ஒளியுள்ளது என கோமேதம் எட்டு விதமாம்.

विच्छायं लघु रूक्षाम्लं(भं) चिपिटं पटलान्वितम् ।
निष्प्रभं पीतकाचाभं गोमेदं न शुभावहम् ॥ ६५ ॥

(65) நிறம் இல்லாதது – இலேசானது – பளபளப்பு இல்லாததுபோல் இருப்பது – அவல்போல் – (தகட்டையாக) இருப்பது – வெள்ளை படர்ந்தது – ஒளி இல்லாதது – மஞ்சள் பூனைக்காச்சி மணியைப்போலிருப்பது இவ்வித கோமேதகங்கள் சுபகரங்கள் அன்று.

वैडूर्यं श्यामशुभ्राभं समं स्वच्छं शुभावहम् ।
भ्रमशु(च्छु)भ्रोत्तरीयेण गर्भितं शुभमीरितम् ॥ ६६ ॥

(66) பச்சை கலந்த வெளுப்பு நிறம்போன்ற நிறமுள்ளதும், ஸமமான உருவமுள்ளதும், சுத்தமாக இருப்பதும் சுபத்தைக் கொடுக்கும்.

சுழலும் வெண்மையான வஸ்திரத்தை உட்புறத்திலுடையது, (அதாவது வைடூரியத்தினுள் வெண்மையான நூலிழை போன்ற உருவம் காணப்படும். இது எந்தப்பக்கம் திரும்பினும் அங்கு தோன்றி ஒளியை வீசும். இதை நூலிழை, நூலோட்டம் என்று கூறுவார்கள். இது உள்ள வைடூரியம் என்பது பொருள்) சுப பலனைக்கொடுக்கும்.

श्यामतोयसमच्छायं चिपिटं लघु कर्कशम् ।
सप्त(पञ्च)गर्भोत्तरीयं च वैडूर्यं नैव शस्यते ॥ ६७ ॥

(67) கருப்பான நீரின் நிறமுள்ளது அல்லது கருமேகம் போன்ற நிறமுள்ளது — அவலைப்போல (தகட்டை அல்லது சப்பையாக) இருப்பது–இலேசாக இருப்பது – கரடுமுரடாக இருப்பது – (வெண்ணிறமில்லாத) நூலோட்டமுள்ளது. இந்த ஐந்துவித வைடூரியமும், புகழத்தக்கதல்ல. (இகழத்தக்கது என்பது பொருள்.)

रत्नशास्त्रे च —

प्रजापतिरपः सृष्ट्वा तासु वीर्यमपासृजत् ।
तदण्डमभवद्धैमं सहस्रार्कसमद्युति ॥ ६८ ॥

यत्र यत्र घनं वीर्यं अपतत् ब्रह्मणः पुरा ।
तत्र तत्राकरा आसन् रत्नानां सुप्रभात्मनाम् ॥ ६९ ॥

ரத்ன சாஸ்திரத்தில் —

(68–69) பிரம்ஹதேவர் ஜலத்தைப் படைத்து அதில் தனது வீரியத்தை சிந்தினர். அது ஆயிரம் சூரியனைப்போன்ற ஒளியுடைய ஸுவர்ணமயமான முட்டையாயிற்று. எந்த எந்த இடங்களில் பிரம்மாவின் கடினமான வீரியம் சிந்திற்றோ. அந்த அந்த இடங்களில் சிறந்த ஒளி நிறைந்த ரத்னங்கள் உண்டாகும் ஆகரங்கள் உண்டாயின.

मुक्तास्फटिकौ सत्वोत्तरात् वीर्यात्, गोमेदमाणिक्यविद्रुमाः राजसोत्तरात्, अञ्जनोपलनीलाद्याः तामसात्, वज्रपुष्परागवैडूर्या रजसः गुणत्रयात् मरकतम् ॥ इति ॥

முத்து–ஸ்படிகம் இரண்டும் ஸத்துவ குணம் அதிகமுள்ள வீரியத்திலிருந்தும், கோமேதகம்–மாணிக்கம்–பவழம் இவைகள் ரஜோ குணம் அதிகமுள்ள வீரியத்திலிருந்தும், அஞ்சனக்கல்–நீலம் முதலியவைகள், தாமஸ குணத்திலிருந்தும், வைரம்–புஷ்பராகம், வைடூரியம் இவைகள் ரஜோ குணத்தினின்றும், மரகதம் முக்குணங்களிலிருந்தும் உண்டாயின என்று கூறப்பட்டிருக்கிறது.

बलासुराङ्गाच्च रत्नोत्पत्तिः श्रूयते ।

பலன் என்ற அஸுரனுடைய அங்கங்களிலிருந்தும் ரத்னங்கள் உண்டானதாகக் கூறப்படுகிறது.

विश्वकर्मीये च —

इदानीं खलु वक्ष्यामि पञ्चभूतसमुद्भवान् ।
गुणदोषान् प्रकीर्णांस्तु समाहृत्य पृथक् पृथक् ॥ ७० ॥

விச்வகர்மீயத்தில் —

(70) இப்பொழுது, தனித்தனியே சிதறிக் கிடக்கும் பஞ்சபூதங்களின் குணதோஷங்களை ஒன்று சேர்த்துக் கூறுகிறேன்.

निस्तलत्वं सुगन्धत्वं निर्व्रणत्वं मनोज्ञता ।
तथा विगतधातुत्वं इत्येते पार्थिवा गुणाः ॥ ७१ ॥

(71) வட்டவடிவமாக இல்லாமை–நறுமணமுடைமை – வெட்டுவெடு

இல்லாமை – கவர்ச்சி – மண் மணல் கல் முதலியவைகளில்லாமை இவைகள் பார்த்திவ குணங்களாம்.

वैषम्यं धातुयुक्तत्वं व्रणत्वं बिन्दुता तथा ।
दोषा रत्नेषु विज्ञेयाः चत्वारो भूमिसंश्रिताः । ७२ ॥

(72) கல்லுகள், சீருக இல்லாதிருத்தல் – (அதாவது ஒரு புறம் அகலம் மற்றொரு புறம் குறுகல் போன்றவைகள்) கல் மண் மணல் முதலியன கலந்திருப்பது – வெட்டுப்பட்டிருப்பது அல்லது உடைந்திருப்பது – புள்ளி விழுந்திருப்பது இவைகள் ரத்னங்களில் பூமிஜமான தோஷங்கள்.

स्नेहत्वं शुद्धता शैत्यं कोमलत्वं मनोज्ञता ।
तोयजाः खलु पञ्चैते गुणा रत्ने विवक्षिताः ॥ ७३ ॥

(73) பசையுள்ளதாக இருத்தல் (அதாவது பளபளப்பாக மெருகிட்டது போலிருத்தல்) சுத்தமாக (தோஷமில்லாமல் அதற்குரிய நிறத்துடன்) இருத்தல் குளிர்ச்சி (நீரோட்டம்) அழகு – கவர்ச்சி – இந்த ஐந்தும் ஜலஜ குணங்கள். இவைகள் விரும்பத்தக்கவைகள்.

अस्नेहत्वं क्षयत्वं च लघुत्वं विवर्णता ।
सशर्करत्वं रत्नानां दोषाः तोयभवाः श्रिताः ॥ ७४ ॥

(74) மெருகில்லாமை – குறைவுடைமை – சிம்பல், ஒடுக்கு விழுதல், சப்பையாக இருத்தல் முதலியன – வெள்ளை படர்ந்திருத்தல் – (கல்லின் இயற்கை நிறத்தை மறைக்கும்படி அதன்மேல் பூண்டின் தோலியைப்போல வெளுப்பாகப் படருதல்) நிறமில்லாமை – (அதற்கு உரிய வர்ணம் அழுத்தமாக இல்லாமல் பரவலாக இருப்பது) கல் கலந்தது – இவைகள் ரத்னங்களில் ஜலஜமான தோஷங்கள்.

सर्वदा द्युतिमत्त्वं च रक्तता चोर्ध्वरश्मिता ।
दूरोज्ज्वलनता चैव गुणाः ज्वलनसंभवाः ॥ ७५ ॥

(75) எப்பொழுதும் ஒளி வீசுதல் – சிகப்பு நிறம் – மேல் நோக்கி ஒளி வீசுதல் – தூரத்தில் ஒளி வீசுதல் – இவைகள் அக்கினிஜ குணங்கள்.

त्रासत्वं पिङ्गलत्वं च तथा विगतवर्णता ।
अधोगतप्रभावत्वं दोषा हुतवहाश्रिताः ॥ ७६ ॥

(76) பொறிசல் – மஞ்சள் நிறம் – நிறமில்லாமை கீழ்நோக்கி ஒளி வீசுதல் இவைகள் அக்கினிஜமான தோஷங்கள்.

वृद्धत्वं समरागत्वं द्युतिमत्वं च दीर्घता ।
इमे मारुतसंजाताः गुणा इति बुधैः स्मृताः ॥ ७७ ॥

(77) முதிர்ச்சி – எங்கும் நிறைந்த நிறமுடைத்தல்—ஒளி வீசுதல் – நீண்டிருத்தல் இவைகள் வாயுவினாலுண்டாகும் குணங்கள்.

भ्रमत्वं दुर्बलत्वं च शबलत्वं च विद्धता ।
लघुत्वं कोमलत्वं च दोषा मारुतसंश्रिताः ॥ ७८ ॥

(78) சுழி விழுதல் – அழுத்தமாக இல்லாமல் துர்பலமாக இருத்தல் – பலவர்ணமுடையதாக இருத்தல் – புள்ளி கோடு முதலியவைகள் விழுதல்—கனமாக இல்லாமல் இலேசாக இருத்தல் – வர்ணம் உண்டாகாமலிருத்தல் இவைகள் வாயுவினாலுண்டாகும் தோஷங்கள்.

वैमल्यं सर्वरत्नानां गुणश्चाकरजः स्मृतः ।

(79) ரத்னங்கள் தோஷமில்லாமல் குணமுள்ளதாக இருப்பது என்பது அவைகள் உண்டாகும் ஆகரங்களால் ஏற்படக்கூடியது.

खरत्वं यन्मलेनाढ्यं द्वौ दोषौ व्योमसंभवौ ॥ ७९ ॥

கைக்கு மிருதுவாக இல்லாமல் சொரசொரப்பாக இருத்தல் – அழுக்கு நிறைந்திருப்பது இவ்விரண்டு தோஷங்களும் ஆகாசஜமான தோஷங்கள்.

स्वाकृतिः गुणवत्ता च वृत्तत्वं समरागता ।
स्वच्छता विमलत्वं च गुणाः साधारणा मणेः ॥ ८० ॥

(80) அழகான உருவம் — குணமுடைமை — வட்டவடிவம் — எங்கும் நிறைந்த ஒளி – தெளிந்த ஒளி – தோஷமில்லாமை – இவைகள் ஸகல ரத்னங்களுக்கும் ஸாதாரணமாக இருக்கவேண்டிய குணங்களாம்.

वैक्रान्तो वज्रसमानगुणो धातुविशेषः । तदुक्तं रत्नसारसंग्रहे—

अष्टाश्रिरष्टफलकः षट्कोणो मसृणो गुरुः ।
शुद्धमिश्रितवर्णैश्च युक्तो वैक्रान्त उच्यते ॥ ८१ ॥

विक्रुन्तयति लोहानि तेन वैक्रान्त उच्यते ।
वज्रस्थाने नियोक्तव्यः वैक्रान्तः सर्वरोगहा ॥ ८२ ॥ इति ॥

(81–82) வஜ்ரத்திற்கு ஸமானமான குணமுடைய ஒருவித கல்லுக்கு வைக்ராந்தம் என்று பெயர். இது ரத்னஸார ஸங்கிரஹத்தில் கூறப்பட்டிருக்கிறது.

இது எட்டு தளமுள்ளதாகவும், எட்டுப்பட்டையுள்ளதாகவும், ஆறு கோணமுள்ளதாகவும், கொழுகொழுப்பாகவும், கனமாகவும் இருப்பதுடன், சுத்த வர்ணமுள்ளதாகவும், மிச்ர வர்ணமுள்ளதாகவும் இருக்கும். இது வைக்ராந்தம் எனப்படும்.

இது மற்ற லோஹங்களைக் கிழித்துவிடும். ஆகையாலேயே இது வைக்ராந்தம் என்று கூறப்படுகிறது. வைக்ராந்தமானது வஜ்ரத்திற்குப் பதிலாக உபயோகிக்கத்தக்கது. ஸகல ரோகங்களையும் போக்கும் என்று கூறப்பட்டிருக்கிறது.

देव्या शूलेन महता महिषासुरदेहात् उत्पादिता रक्तबिन्दवः वैक्रान्तवज्रमासीदिति कथा ।

மஹிஷமர்திநீ தேவியானவள் பெரிய சூலத்தால் மஹிஷாஸுரனைக் குத்த அவன் தேகத்திலிருந்து சிந்திய ரக்த பிந்துக்களிலிருந்து "வைக்ராந்தம்" என்ற வைரம் உண்டாயிற்று என்பது கதை.

पुरा वृत्रवधार्थं विश्वकर्मा दधीचिवंशास्थिना वज्रायुधं कृत्वा इन्द्राय दत्तवान् ।
अन्यान्यस्थीनि भूमिपतितानि वज्राकाराण्यासन् बलासुरास्थीनि च ॥

முன்னொரு காலத்தில், விருத்ராஸுரனைக் கொல்லுவதற்காக, விசுவகர்மா ததீசி முனிவரின் முதுகெலும்பினால் வஜ்ராயுதத்தைச் செய்து கொடுத்தான். மற்ற எலும்புகள் பூமியில் விழுந்து வைரங்களாக ஆயின என்றும், பலாஸுரனின் எலும்புகளும் வைரங்களாக ஆயின என்றும் கூறப்பட்டிருக்கிறது.

अन्ये तु

भूस्वभावाद्धि रत्नानि जातानि विविधानि तु ।
शकला रत्नरूपत्वं प्राप्ताः कालान्तरेण वा ॥ ८३ ॥

इति ब्रुवते ।

(83) மற்றும் சிலர், பூமியின் இயற்கையாலேயே பற்பல ரத்னங்களும்

உண்டாயின என்றும், கற்களே காலக்கிரமத்தில் ரத்னங்களாக மாறுகின்றன என்றும் கூறுகின்றனர்.

आङ्गीरसमते तु —

महाराष्ट्रे तु कुद्दालो नाम देशोऽस्ति तत्र तु ।
वज्रस्य प्रभया तत्र वज्रमुत्पाद्यते स्फुरत् ॥ ८४ ॥

(84) ஆங்கீரஸர் என்ற முனிவரின் அபிப்பிராயமோ எனில், மஹாராஷ்டிர தேசத்தில், குத்தாலம் என்ற இடத்தில் மின்னல்களின் அல்லது இடிகளின் ஒளிகளால் பிரகாசமான வைரங்கள் உண்டாகின்றன என்பதாம்.

भूमेर्नवसु खण्डेषु खण्ड एष इलावृतः ।
तत्र मेरुगिरेः पार्श्वे दक्षिणे काश्यपो मुनिः ॥ ८५ ॥

सुरासुरहितो(क्षितौ) ह्यास्ते ज्योतिष्मत्यास्तटे शुभे ।
आकरास्तत्र सन्ति स्म वज्राणां बहलत्विषाम् ॥ ८६ ॥

तैः पीठिकाऽमरावत्याः निर्मिता विश्वकर्मणा ।
श्वेतद्वीपे हरेर्वेश्म तथा बिन्दुसरस्तटम् ॥ ८७ ॥

पुरी भोगवती नाम भर्तुर्हिमवतः पुरी ।
द्वारवत्यां हि कृष्णस्य गृहं तैरेव निर्मितम् ॥ ८८ ॥

(85-88) பூமியின் ஒன்பது கண்டங்களில் இந்த கண்டம் இலாவிருதமாம். மேரு மலையின் தென் பக்கத்தில் தேவர்களும் அஸுரர்களும் வஸிக்குமிடத்தில் காசியப முனிவர் வஸித்து வருகிறார். இது அழகான ஜ்யோதிஷ்மதீ நதிக்கரையிலிருக்கிறது. அங்கு மிகச்சிறந்த ஒளியுள்ள வைரங்கள் கிடைக்கும் சுரங்கங்கள் இருக்கின்றன.

அவ்விடத்தில் எடுத்த வைரங்களால்தான் விசுவகர்மா அமராவதியில் பீடிகைகளை திட்டாணிகளை (உட்காரும் இடங்களை) செய்தான்.

சுவேத துவீபத்தில் மஹாவிஷ்ணுவின் வாஸஸ்தலத்தைச் செய்தான். பிந்து ஸரஸ்ஸின் அடித்தளங்களையும் படிக்கட்டுகளையும் செய்தான். இமயமலைக்குத் தலைவன் அல்லது அரசனுடைய பட்டணத்தை நிர்மாணம் செய்தான்.

துவாரகையில் கிருஷ்ணனின் கிருஹத்தையும் அந்த வைரங்களால்தான் கட்டினான்.

उत्तराः कुरवः सिन्धुदेशश्चाप्याकरौ मतौ ।
मेरोरुत्तरसानुश्च यत्रासीत् शिखिवाहनः ॥ ८९ ॥

आरोहति नरेन्द्राणां मकुटं न कदाप्यधः ।
मङ्गलाभरणे वज्रं कुलस्त्रीणां न योजयेत् ॥ ९० ॥

वज्रयुक्तं गुणमङ्गल्यं तासां वैधव्यदं भवेत् ।

(89–91) உத்தரகுரு-ஸிந்து தேசம்-இவ்விரண்டு இடங்களிலும் வைரங்கள் கிடைக்கும் சுரங்கங்கள் உள்ளன.

முருகக்கடவுள் வஸித்த மேருமலையின் வடபக்கத்திலுள்ள மலைச்சாரலில், மிகமிகச் சிறந்த வைரங்கள் உண்டாகின்றன. இவைகள் அரசர்களின் கிரீடங்களிலேதானிருக்கும். அதைவிட்டுக் கீழே இறங்காது.

வைரத்தைக் குலஸ்திரீகளின் மங்களாபரணத்தில் (மங்களாபரணம் = தாலி) இழைக்கக்கூடாது. வைரம் இழைத்தது குணமுள்ளதானாலும் அது அவர்களுக்கு வைதவ்யத்தை உண்டுபண்ணும்.

विश्वकर्मीये च —

मूर्ध्नि न धारयेत् वज्रं शिरसापि च योषिताम् ॥ ९१ ॥

(91) விசுவகர்மா கூறியிருப்பதில் :- ஸ்திரீகள், தலையின் முன்பாகமாகிய உச்சி மண்டையிலோ, பின்பாகத்திலோ வைரத்தைத் தரிக்கக்கூடாது.

अगस्त्ये च —

चातुर्वर्ण्यबहिर्भूतः न स्पृशेत् कुलिशं नरः ।

(92) அகஸ்தியர் கூறியிருப்பதில் :— நான்கு ஜாதிக்கு அப்புறப்பட்டவன் வைரத்தைத் தொடவும்கூடாது.

॥ अथ पद्मरागः ॥

विप्रजातिर्जातरङ्गः क्षत्रियः कुरुविन्दकः ॥ ९२ ॥

सौगन्धिकं तु वैश्यः स्यात् गोपाङ्गो नीलगन्धि च ।

इति । नामद्वयं शूद्रजातेः ।

பத்மராகம்.

(92–93) பத்மராகத்தில் பிராஹ்மண ஜாதிக்கு ஜாதரங்கம் என்றும், க்ஷத்திரிய ஜாதிக்குக் குருவிந்தம் என்றும், வைசிய ஜாதிக்கு ஸௌகந்திகம் என்றும், சூத்திர ஜாதிக்கு கோபாங்கம்–நீலகந்தி என்று இரண்டு பெயர்களும் கூறப்பட்டிருக்கின்றன.

॥ मरकतम् ॥

विभिन्नमरुणस्याण्डं कटिसूत्रे गरुत्मतः ॥ ९३ ॥

विनता योजयामास प्रणयान्मेचकप्रभम् ।
शिथिलं त्वपतत् भूमौ यस्यां तां चाकरं विदुः ॥ ९४ ॥

மரகதம்.

(93–94) விநதையானவள், பச்சை நிறமாக இருந்த அருணன் உண்டான உடைந்த முட்டையோட்டை, கருடனுடைய அரைநாளில் அன்புடன் அணிந்தாள். அந்த ஓடு நழுவி பூமியில் விழுந்தது. அது எங்கே விழுந்ததோ அந்த விடத்தில் பச்சைகள் உண்டாகும் சுரங்கம் உண்டாயிற்று என்று கூறுகிறார்கள்.

पित्ते दैत्यपतेर्हृते फणभृतां पत्या निजं प्रापिते
लोकं पत्ररथेश्वरो निजबलादाहृत्य तज्जग्धवान् ।
वेगादुड्डयनेन संभृतपरिक्लेशः क्षणादर्णवो-
पान्तेष्वाकुलमुज्जहार गरुडो देशे तुरुष्केपि च ॥ ९५ ॥

तत्कारणान्मरतकं गारुत्मतमितीरितम् ।

(95–96) நாகராஜாவான வாஸுகி, பலாசுரனுடைய பித்தத்தை எடுத்துக்கொண்டு தனது லோகத்திற்குச் செல்லுகையில், கருடன் தனது வலிமையினால் அதை அபஹரித்துத் தின்றான். பின் அதிவேகமாகப் பறக்கையில் உண்டான களைப்பினாலே, அந்தப் பித்தத்தை ஸமுத்திரக் கரையிலும் துருஷ்க தேசத்திலும் சிதறும்படி கக்கினான். அக்காரணத்தினாலேயே, மரகதமானது காருத்மதம் என்று கூறப்படுகிறது.

मोहिनीं दृष्ट्वा ईश्वरस्य यत्र रेतोऽपतत् तत्र मरतकस्य आकरा आसन् ।

மோஹினியைக் கண்டு மோஹித்த ஈசுவரனுடைய வீரியம் சிந்தியவிடங்களில் மரதகச் சுரங்கங்கள் உண்டாயின.

शास्ताचाप्यभवत्तत्र तद्वीर्याद्वनदेवता ॥ ९६ ॥

पुष्पाह्वयः गिरिकाचः शंखमृतजं चेति त्रयो मरतकभेदाः ॥

அவ்விடத்தில் ஈசுவர வீர்யத்தினுல் வனதேவதையான சாஸ்தாவும் (ஐய்யனுரும்) உண்டானுர்.

புஷ்பாஹ்வயம்–கிரிகாசம்–சங்கமிருதஜம் என்று மரதகத்தின் பேதங்கள் மூன்று.

॥ अथ पुष्परागः ॥

हिरण्याक्षेण युध्यत आदिवराहस्य घोणाग्रनिष्पादिताः श्लेष्मकणिकाः यत्रापतन् तत्र ताः पुष्परागोपला आसन् ।

புஷ்பராகம்.

ஹிரண்யாக்ஷனேடு ஆதிவராஹமூர்த்தி சண்டை செய்யும்பொழுது, அவருடைய மூக்கு நுனியிலிருந்து சிலேஷ்மத்திவிலைகள் எங்கெங்கு விழுந்தனவோ அங்கங்கு புஷ்பராகக் கற்கள் உண்டாயின.

हेमच्छायं शिरोवृत्तं ज्योतिरङ्गारनिर्मलम् ।
कान्त्या मनोहरं स्निग्धं पुष्परागं प्रशस्यते ॥ ९७ ॥

(97) தங்க நிறமாகவும், மேலே வட்டவடிவமாகவும், அல்லது தலை போல் வட்ட வடிவமாகவும், நெருப்புத் துண்டம்போல் சுத்தமான ஒளியுடையதாகவும், மனதைக் கவரும் பிரகாசமுடையதாகவும், நல்ல மெருகுடையதாகவும் இருக்கும் புஷ்பராகமானது புகழப்படுகின்றது.

पारियात्रस्य शृङ्गाणि मन्दरस्य च सानवः ।
पुरं पुरन्दरस्यापि तदीया च सभा पुनः ॥ ९८ ॥

तत्पुष्परागविहितं विधिना विश्वयोनिना ।

(98–99) பாரியாத்ர மலையின் சிகரம்–மந்தர மலையின் தாழ்வாரங்கள்–இந்திரனுடைய பட்டணமாகிய அமராவதி–இந்திரனுடைய கொலுமண்டபம் இவைகள், அந்தப்புஷ்பராக மணிகளாலேயே உலகத்தைப்படைத்த பிரஹ்ம தேவரால் ஸிருஷ்டிக்கப்பட்டன.

॥ अथ विद्रुमः ॥

स्वया तन्वा पुरा ब्रह्मा पितॄणामसृजत्कुलम् ॥ ९९ ॥

तया सन्ध्यात्मना तन्वा यत्र यत्र मलानि हि ।
त्यक्तानि तत्र तत्रासन् विविधा आकरा अपि ॥ १०० ॥

பவழம்.

(99–100) முன்னொரு காலத்தில், பிரம்மதேவர், தனது உடலிலிருந்து பித்ரு தேவர்களைப் படைத்தார். ஸந்தியாகால வடிவமான அவ்வுடலிலிருந்து வியர்வை முதலிய அழுக்குகள், பற்பலவிடங்களில் விழுந்தன. அவைகள் விழுந்த விடங்களில், ரத்னச் சுரங்கங்கள் உண்டாயின.

वज्रपाणिः पुराऽऽकाशे लोकनाशं वितन्वताम् ।
पक्षस्य कदनं चक्रे पतितं धरणीभृताम् ॥ १०१ ॥

न्यपतन्त पुरे देशे लूनपक्षा महीधराः ।
गिरीणां पात्यमानानां पक्षशातसमुद्भवाः ॥ १०२ ॥

निपेतुः क्षतजा यत्र खनेस्तत्र समुद्भवः ।

(101–103) முன்னொரு காலத்தில், மலைகள் பறந்து சென்று உலகத்தை அழித்தன. அப்பொழுது இந்திரன், மலைகளின் சிறகுகளை வஜ்ராயுதத்தால் வானத்திலேயே சிதைத்தான். சிறகுகள் விழுந்தன. சிறகுகளை இழந்த மலைகளும், பட்டணங்களிலும், தேசங்களிலும் ஆங்காங்கு விழுந்தன. அவைகளின் ரக்தங்கள் சிந்தியவிடங்களில் பவழங்கள் உண்டாகின்றன.

मात्रा विभिन्नदेहस्य सप्तसप्ताश्वसारथेः ॥ १०३ ॥

निपेतुः खण्डखण्डानि यासु यासु स्थलीषु च ।
तासु तास्वाकरा आसन् विद्रुमाणां प्रसूतये ॥ १०४ ॥

(103–104) அருணன் இருந்த முட்டையை, விநதை உடைத்தாள். அந்த முட்டையின் ஓடுகள் விழுந்த இடங்களில், பவழங்கள் உண்டாகும் ஆகரங்கள் உண்டாயின.

यदा जघान भगवान् केशवो मधुकैटभौ ।
यत्र श्लक्ष्णं तयोर्मांसं तत्र विद्रुमसंभवः ॥ १०५ ॥

इत्येवं बहूनि ॥

(105) மஹாவிஷ்ணு மதுகைடபர்களை வதைத்தபொழுது, அவர்க

ளுடைய மனோஹரமான மாமிசங்கள் விழுந்த இடங்களில், பவழங்கள் உண்டா கின்றன. இனி அதிகம் சொல்லத் தேவையில்லை.

आदित्यतरुणोपमं - तरुणादित्योपमम् ॥ इत्यर्थः

ஆதித்தியதருணோபமம் என்ற பதத்திற்கு, நடுப்பகல் சூரியனைப்போன்றது என்பது பொருள்.

(இந்தப் பதம் இந்நூலிலேயே வரவில்லை. ஆகையால், இப்பதம் நூலில் சேர்ந்ததல்ல).

ரத்நபரீக்ஷை முற்றும்.